# தமிழர் பொருண்மியம்

வாரமலர்

TAMILS ECONOMY



விலை - 100/=

இதழ் - 59

03.03.2024

நுண்பாக, சிறிய மற்றும் நடுத்தர நிறுவன துறையினருக்கு கடன் 10

ஒரு கனவு நிஜமாகிறது 12

தக்காளிப் பயிர்ச் செய்கையினை வெற்றிகரமாக முன்னெடுப்பதற்கு 18

## சர்வதேச சந்தைகளில் இலங்கை இளநீருக்கு அதிகரிக்கும் கிராக்கி

# எல்லையைத் தாண்டும் மீனவர்கள்! பிரச்சினைக்குத் தீர்வே இல்லையா?



லக்ஷ்மன்

எல்லை தாண்டிய மீன்பிடி காரணமாக ஏற்படும் பிரச்சினைகளுக்கும் கச்சதீவு புனித அந்தோனியார் திருவிழாவில் இந்திய நாட்டின் பக்தர்கள் கலந்து கொள்ளாமைக்கும் இருக்கின்ற தொடர்பு சற்று வித்தியாசமானதுதான்.

எப்படியாயினும், இந்திய மத்திய அரசும், தமிழ்நாட்டு அரசும் இந்திய-இலங்கை மீனவர்களுக்கிடையில் இருக்கும் முரண்பாட்டினைத் தீர்த்துவைக்க முயற்சிக்க வேண்டும். அந்த முயற்சி இலங்கை நாட்டின் இறைமை, ஆட்புல ஒருமைப்பாட்டினைப் பாதிக்காத வகையில் அமைய வேண்டும்.

### உடன்படிக்கைகள்

1921ஆம் ஆண்டு இந்திய - இலங்கை பிரிட்டிஷினால் செய்துகொள்ளப்பட்ட மீன்பிடி ஒப்பந்தத்தின்படி இந்திய மீனவர்களுக்குப் பாக்கு நீரிணையில் அதிக கடல்பகுதியும், இலங்கை மீனவர்களுக்குக் குறைவான கடல் பகுதியும் பிரிக்கப்பட்டது. அதில் கச்சதீவு உள்ளிட்ட 28 கடல் மைல் பகுதிகள் இந்தியாவுக்கும் நெடுந்தீவு உள்ளிட்ட 12 கடல் மைல் கடல் பகுதிகள் இலங்கைக்கும் என பிரிக்கப்பட்டன.

1974இல் மேற்கொள்ளப்பட்ட ஒப்பந்தத்தின் காரணமாக கச்சதீவு இலங்கைக்கு வழங்கப்பட்டது. அதனால் இந்திய மீனவர்கள் பயன்படுத்தி வந்த 500 சதுர கி.மீ. கடல் இலங்கை வசமாகியது. இதனால், தமது பாரம்பரிய மீன்பிடி பகுதிகள் பறிபோனதாக இந்திய மீனவர்கள் எண்ணு கிறார்கள். ஆனால், 1974 கச்சதீவு ஒப்பந்தத்தின் 6ஆம் சரத்துப்படி இந்த 500 சதுர கி.மீ. பரப்பளவில் இரு நாட்டு மீனவர்களும் மீன்பிடிக்க உரிமையுள்ளது.

### இழுவை வலைகள்

இருந்தாலும் பாக்கு நீரிணைப் பகுதியில் இழுவைப் படகுகளைப் பயன்படுத்துவதும் இழுவை வலைகளைப் பயன்படுத்தி இந்திய மீனவர்கள் மீன்பிடியில் ஈடுபடுவதனாலேயுமே பிரச்சினைகள் எழுகின்றன. இந்திய- இலங்கை மீனவர்களிடையே இருக்க வேண்டிய ஒற்றுமை சீர்குலைவுக்கும் இதுவே காரணம்.

பாக்கு நீரிணை கடல்பகுதியில் இந்திய மீனவர்கள் இழுவை வலையைப் பயன்படுத்தக் கூடாது என்பது இலங்கை மீனவர்களின் கோரிக்கை. இந்த நடைமுறையைக் கைக்கொள்ள முடியாமையினால் ஏற்படும் பிரச்சினை பல தசாப்தங்களாகத் தொடர்கின்றன எனலாம். இழுவைப்படகுகளின் செயற்பாட்டினால், இலங்கைக் கடற்பரப்பிலுள்ள மீனும் பிற வளங்களும் அழிகின்றன.

அதனால் இலங்கை மீனவர்களின் வாழ்வாதாரம் பெருமளவில் பாதிக்கப்படுகிறது. இவ்வாறான சூறையாடலுக்கு இந்திய அரசாங்கத்தின் ஆதரவும் இருக்கிறது என்பதே இலங்கை மீனவர்களது கருத்து. அதற்கு இலங்கைக் கடற்பரப்பில் கைது செய்யப்படும் தமது மீனவர்களது விடுதலை தொடர்பில் கொடுக்கப்படும் அழுத்தம் உதாரணமாகக் காட்டப்படுகிறது. யுத்த காலங்களிலும் இப்பிரச்சினை இருந்திருந்தாலும், யுத்தம் மௌனிக்கப்பட்ட பின்னர் அதிகரித்திருப்பதாகவே உணரப்படுகிறது.

### முறுகல் நிலை

இலங்கை அரசாங்கமானது இப்பிரச்சினையைப் பூதாகாரமாக்குவதற்கு இலங்கைத்தமிழர்கள்தமிழக மீனவர்களுடனும், இந்தியாவுடனும் முரண்படும் நிலை அல்லது முறுகல் நிலை ஏற்படுவதற்காக இருக்கலாம் என்ற சந்தேகம் காணப்படுகிறது. அதேநேரத்தில், இந்தியா ஆதிக்க மனோநிலையிலேயே செயற்படுகிறது என்றும் சொல்லப்படுகிறது.

இலங்கையர்கள் மாத்திரமன்றி, இந்தியப் பக்தர்களும் இணைந்து வருடம்தோறும் வெகு விமர்சையாக கொண்டாடும் கச்சத்தீவு புனித அந்தோனியார் ஆலய திருவிழா இவ்வருடம் இந்தியர்களில்லாது நடைபெற்று முடிந்திருக்கிறது.

திருவிழாவிற்கு இலங்கையில் இருந்து 4,454 பக்தர்கள் கலந்துகொண்டனர். மீனவர்களின் விடுதலையை வலியுறுத்தி இந்தியப் பக்தர்கள் எவரும் வருகைதரவில்லை. பக்தர்களின் நலன் கருதி சுகாதார வசதிகள் போக்குவரத்து ஒழுங்குகள், உணவு வசதிகள் என்பன ஏற்பாடு செய்யப்பட்டிருந்தன. வரலாற்றுத் தவல்களின்படி 111 திருவிழாவாக இது அமைந்திருந்தது.

### கச்சதீவு பகிஷ்கரிப்பு

இத்திருவிழாவுக்கு அரசியல் சாயம் பூசப்பட்டு அநாகரிகப்படுத்தப்படாது, ஆன்மீக நலன்களை மேவும் புனிதமான திருவிழாவாக நடைபெறவேண்டுமென்பதே கத்தோலிக்க மக்களின் வேண்டுகோளாகும் என்றும் திருவிழாவை இந்தியர்கள் பகிஷ்கரிக்கக்கூடாது எனவும் கருத்துக்கள், வேண்டுகோள்கள் முன்வைக்கப்பட்டன.



குறிப்பாக, தீர்க்கப்படாமல் இழுபட்டுச் செல்லும் இரு நாட்டு மீனவர் பிரச்சினைகளுக்கும் நிரந்தரத் தீர்வு ஏற்படவேண்டும் என்பதில் மாற்றுக்கருத்து இருக்கமுடியாது.

இழுவை மடிகளைக் கொண்ட ரோலர் படகுகள் கடல் வளத்தை நாசப்படுத்திக் கொண்டிருப்பதனை எந்த விதத்திலும்

அனுமதிக்க முடியாது. சாதாரண நாட்கூலிகளான மீனவர்கள் ரோலர் படகுகளின் சொந்தக்கார முதலாளிகளின் பிடிகளுக்குள் அகப்பட்டுச் செய்வதறியாது, கட்டளைகளுக்குப் பணிந்து தொழில் செய்யும் சூட்சுமம் உயர்மட்ட அளவில் நிறுத்தப்பட வேண்டும்.

இதை விடுத்து, ஆன்மீகத்திற்கும் வியாபாரத்திற்கும் முடிச்சுப் போடுவது ஏற்றுக்கொள்ளத்தக்கதல்ல என மட்டக்களப்பு ஆயர் இல்ல அருட்தந்தை ஜே.ஐ.சந்திரா இது தொடர்பில் கருத்து வெளியிட்டிருந்தார்.

**கறுப்புக்கொடி போராட்டம்**

இதற்கிடையில், இந்திய இழுவை படகுகளுக்கு எதிரான கறுப்புக் கொடி போராட்டம் ஒன்றினை இந்திய- இலங்கை கடல் எல்லையில் நடத்துவதற்கு யாழ்ப்பாண மாவட்ட கிராமிய கடற்றொழில் அமைப்புகளின் சம்மேளனம் அழைப்பு விடுத்துள்ளது. இப் போராட்டம் இன்று ஞாயிற்றுக் கிழமை நடைபெறலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

இந்திய இழுவை படகுகள் எமது கடல் எல்லைக்குள் அத்துமீறி நுழைந்து தொழில் முதல்களை அழித்து வந்தவேளை, எமது கடற்படையினரால் அந்த இந்திய இழுவைப்படகுகள் கைப்பற்றப்பட்டு அதில் பயணித்த கடற்றொழிலாளர்கள் சிறையில் அடைக்கப்பட்டுள்ளார்கள்.

இப்போது இந்திய அரசாங்கம், அந்த கடற்றொழிலாளர்களை விடுதலை செய்யுமாறு எமது அரசாங்கத்திற்கு அழுத்தங்களைக் கொடுத்துக் கொண்டிருக்கின்றது. எங்களுடைய வளங்களை அழித்தவர்களை எப்படி விடுதலை செய்ய முடியும்? அவர்களுக்குரிய தக்க தண்டனை கொடுத்த பின்னரே அவர்களை விடுதலை செய்யலாம். ஏனென்றால் எங்களது வளங்கள் எத்தனையோ காலமாக அழிக்கப்பட்டுள்ளன.

எங்களுடைய வளங்களைச் சூறையாடி



தங்களது பிழைப்புகளை நடத்தியவர்கள், தங்களது மீனவர்களை எமது அரசாங்கம் பிடித்து வைத்துள்ளபோது அவர்களை விடுதலை செய்யுமாறு கேட்டுக் கொள்கின்றார்கள் என்பது அவர்களது குற்றச்சாட்டு. எங்களது அரசாங்கம் இந்திய அரசாங்கத்தின் அழுத்தங்களுக்கு அடிபணியக் கூடாது.

**மீனவர்களின் கோரிக்கை**

கைது செய்த மீனவர்களுக்குத் தக்க தண்டனையைக் கொடுக்க வேண்டும் எக்காரணம் கொண்டும் அவர்களிடம் மண்டியிடக் கூடாது என்ற பிடிவாதத்துடன் இருக்கின்ற இலங்கை மீனவர்களுக்கு அரசாங்கங்கள் எவ்வாறான முடிவைக் கொடுக்கப் போகின்றன என்பதைப் பொறுத்திருந்து பார்ப்போம்.

இந்திய இழுவைப் படகுகள் பல சூழலியல் பிரச்சினைகளைத் தோற்றுவித்துள்ளன. மீன்களின் பெருக்கமும் வளர்ச்சியும் இப் படகுகளின் செயலால் ஏற்படுகின்றன.

இழுவைப் படகு மீன்பிடி என்பது, கடலின் அடிவரை உள்ள அனைத்தையும் வாரி அள்ளி எடுப்பதாகும். இந்த மீன்பிடி முறையில், வலையை வீசி, கடலின் அடிவரையுள்ள அனைத்தையும் அள்ளுவதால், மீன்களின் வகை, வளர்ச்சி கருத்தில் கொள்ளப்படுவதில்லை. கடலடித் தாவரங்கள் அழிகின்றன. இதனால், கடலடி உயிரியல் சமநிலையைப் பாதிக்கப்படுகிறது.

கடல் வாழ் உயிரினங்கள், கடலடித்தள உயிரியல் நிலைப்புக்கு வேண்டிய நுண்ணுயிரிகளும் உயிரினங்கள், கடலடி பவளப்பாறைகளும் முருகைக் கற்களும் அழிகின்றன. மீன்களின் முட்டைகளும் குஞ்சுகளும் அழிவதனால், மீன்களின் இனப் பெருக்கம் தடுக்கப்படுவதுடன், நீண்ட காலத்தில் மீனிருப்புக்குப் பாதிப்பு என பல சூழலியல் பிரச்சினைகளுக்குக் காரணமாக இருக்கின்றது.

இந்திய-இலங்கைத் தமிழர்களின் நீண்டகால இனப்பிரச்சினைக்குத் தீர்வைப் பெற்றுத் தரும் என்றே இப்போதும் பெரும்பாலான தமிழ்த் தேசியக் கட்டுக்குள் இருக்கும் அரசியல்வாதிகள் நம்புகின்றனர்.

**தீர்வற்ற பிரச்சினை**

ஆனால், வருடத்திற்கு ஒரு தடவை நடைபெறும் கச்சதீவு புனித அந்தோனியார் திருவிழாவுக்கு இந்தியப் பக்தர்கள் வருகை தரா, இந்தியப் பக்தர்களில்லாத திருவிழா நடைபெறும் நிலை ஏற்பட்டிருக்கிறது. தமிழக அரசும் பல வழிகளிலும் இந்திய மீனவர்களது பிரச்சினையைத் தீர்ப்பதற்கு மத்திய அரசைக் கோரிவிட்டது ஏன் அப்பிரச்சினை தீர்க்கப்படாமலேயே தொடர்கிறது என்பது புரியாத புதிரே.

இந்திய மத்திய அரசாங்கமானது வருடத்தில் குறிப்பிட்டளவான நாட்கள் இலங்கைக் கடற்பரப்பில் மீன்பிடிக்க அனுமதிக்குமாறு கோருகிறதே தவிர, இலங்கை மீனவர்களின் வாழ்வாதாரப் பிரச்சினைகளையோ, இழுவைப் படகுகளால் ஏற்படும் சூழலியல் நீண்ட காலப் பிரச்சினையையோ கவனத்தில் எடுப்பதாக இல்லை. இவ்வாறான நிலையில் எல்லை தாண்டும் இந்திய மீனவர்களின் பிரச்சினைக்குத் தீர்வு கிடைக்கப் போவதில்லை என்பதே வெளிப்படை.



மின்மடல் : tamilseconomy@gmail.com
தொலைபேசி : 0764438620

# மீனவர் பிரச்சினை?

தென்னிந்திய மீனவர்களின் ஊடுருவலால் வடபகுதி மீனவர்கள் எதிர்கொள்ளும் நெருக்கடிகள் தீவிரமடைந்திருக்கின்றது. பிரச்சினை தீர்வு காண முடியாத ஒன்றாக உருவாகியிருக்கும் நிலைமையில் மீன்பிடித்துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா இதற்காக தன்னுடைய பதவியையும் துறந்து மீனவர்களுடன் இணைந்து போராட தயாராக இருப்பதாக அறிவித்திருக்கின்றார்.

அமைச்சருடைய இந்த அறிவிப்பு ஓர் அதிரடி அறிவிப்பாக பார்க்கப்பட்டாலும் கூட இதன் பின்னணி கவனத்தில் கொள்ளப்பட வேண்டிய ஒன்று. “மீனவர் பிரச்சினை தொடர்பில் இந்திய அரசாங்கம் இலங்கை மீது தொடர்ந்து அழுத்தம் கொடுக்குமாக இருந்தால் என்னுடைய பதவியை துறப்பதைவிட எனக்கு வேறு வழியில்லை” என்ற வகையில் அவர் கருத்தை தெரிவித்து இருக்கின்றார்.

வடபகுதி மீனவர்களின் போராட்டம், அவர்கள் முன்வைக்கும் குற்றச்சாட்டுக்கள் நியாயமானவை என்பதை அமைச்சர் ஏற்றுக் கொள்கின்றார் என்பது முதலாவது விடயம். இவ்விடயத்தில் இந்திய அரசாங்கத்தின் அழுத்தம் அதிகமாக இருக்கின்றது என்பதை அமைச்சர் மறைமுகமாக சுட்டிக்காட்டுகின்றார். இந்த அழுத்தங்களுக்கு இணங்கிச் செயற்படும் நிலையில் இலங்கை இருக்கின்றது என்பதையும் அமைச்சர் நம்புகின்றார்.

அமைச்சரின் அறிவிப்பின் மூலமாகப் புரிந்துகொள்ளக்கூடியதாக இருப்பது இந்த மூன்று விடயங்களையும்தான். இலங்கைக்கான இந்தியத் தூதுவராக பதவியேற்ற சந்தோஷ் ஜாவை சந்தித்துப் பேச்சுக்களை நடத்திய பின்னரே அமைச்சர் தேவானந்தா இந்த அறிவிப்பை வெளியிட்டிருந்தார். இது அமைச்சர் தெரிவித்திருக்கும் கருத்துக்களுக்கு மேலும் வலுவூட்டுவதாகவும் இருக்கின்றது.

மீனவர் பிரச்சினை நீண்டகாலமாகத் தொடர்கின்ற போதிலும், அதற்கு நிரந்தரமான தீர்வைக் காண்பதற்கு தமிழ் அரசியல் தலைவர்கள் முற்படவில்லை. தமக்குச் சம்பந்தம் இல்லாத ஒரு விடயம் என்பதைப்போலத்தான் அவர்கள் இருந்து வருகின்றார்கள். இரு தரப்பு மீனவர்களும் எல்லை தாண்டிச் செல்வது வழமையான ஒன்றுதான். நடுக்கடலில் இது தவிர்க்க முடியாததாகவும் இருக்கலாம்.

ஆனால், தமிழக மீனவர்கள் இழுவைமடி மீன்பிடியில் ஈடுபடுவதுதான் வடபகுதி மீனவர்கள் எதிர்கொள்ளும் பிரச்சினை. இழுவைமடி மீன்பிடி மீன் வளங்களை மட்டுமன்றி, கடல் வளத்தையும் பெருமளவுக்கு அழித்துவிடுவதால், இலங்கையில் அது தடை செய்யப்பட்டுள்ளது. ஆனால், இந்திய மீனவர்கள் அவற்றைப் பயன்படுத்துவது, வடக்கின் மீன்வளத்தையும், கடல்வளத்தையும் இல்லொதொழிக்கும் செயற்பாடாகவே இருக்கும்.

இந்தியாவில் இது தடை செய்யப்படவில்லை. அதனால், இந்தியக் கரைகளில் மீன்வளம் பெருமளவுக்கு அழிவடைந்துள்ளது. அதனால்தான் அவர்கள் இலங்கைக் கரைக்கு வரவேண்டியிருக்கின்றது. தென்னிந்திய மீனவர்களும், அவர்களுக்குப் பின்னாலிருந்து செயற்படக்கூடிய அரசியல்வாதிகளும் இதனைத் தெரிந்திருந்தும் தெரியாதது போல செயற்படுகின்றார்கள்.

அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா பதவியைத் துறப்பது இதற்கான தீர்வல்ல. அவர் இப்பிரச்சினைக்கு நிரந்தரமான ஒரு தீர்வைக் காண்பதற்கான உபாயத்தைக் கண்டுணர்ந்து அதற்கேற்றவாறு செயற்பட வேண்டும்.

# கணினியை மலிவு விலையில் முதன்முதலில் தயாரித்த டெல்




லக்ஷ்மி நாராயணன்

கம்ப்யூட்டர் விற்பனையில் முன்னிலையில் இருக்கும் டெல் நிறுவனத்தின் தலைவர் மைக்கேல் டெல் (Michael Dell) பிறந்த நாள் கடந்த வாரம் கொண்டாடப்பட்டது. அவரைப் பற்றிய அரிய தகவல்கள் சில உள்ளன. பலருக்கும் இது ஒரு முன்மாதிரியாக அமையலாம்.

அமெரிக்காவின் ஹூஸ்டன் நகரில் பிறந்தார் (1965). சிறு வயதில் தபால் தலைகள் சேகரிப்பதில் ஆர்வம் கொண்டிருந்தார். அதற்கு வரவேற்பு இருப்பதை அறிந்து, யாருடைய உதவியுமின்றி, தானே விளம்பரம் கொடுத்து 10 வயதுக்குள் 2 ஆயிரம் டாலர் சம்பாதித்தார்.

பாடசாலையில் படிக்கும்போது செய்தித்தாள் முகவராக வேலை பார்த்தார். நகரில் புதிதாக குடியேறியவர்கள், புதுமணத் தம்பதிகளின் முகவரிகளை அரசு அலுவலகத்தில் பெற்று, அவர்களிடம் சந்தா பெற்றார். மற்றவர்களைவிட அதிகம் சம்பாதித்தார்.

அப்பா அவருக்கு வாங்கித் தந்த புது ஆப்பிள் கணினியை அக்கு வேறு ஆணி வேறாகக் கழற்றி, பிறகு கச்சிதமாக பொருத்தி கணினி பற்றிக் கற்றுக்கொண்டார்.

கணினியின் வடிவமைப்பு குறித்தும், வர்த்தக ரீதியாகவும் பல விஷயங்களை அறிந்தார். கணினித் தொழிலில் இடைத்தரகர்கள்தான் அதிக லாபம் அடைகிறார்கள். வாடிக்கையாளர்களின் கருத்துக்கு மதிப்பு அளிக்கப்படுவதில்லை என்று தெரிந்து கொண்டார்.

டெக்சாஸ் பல்கலைக்கழகத்தில் தனது விடுதி அறையிலேயே பி.சி. லிமிடெட் என்ற பெயரில் நிறுவனம் தொடங்கினார். கணினி உதிரி பாகங்களை வாங்கி, அவற்றை பொருத்தி கணினியை உருவாக்கி விற்றார். அதிக லாபம் கிடைத்ததால் 19 வயதில் படிப்பை நிறுத்திவிட்டு, முழு மூச்சாக தொழிலில் இறங்கினார். தரகர்கள் இல்லாமல் நேரடியாக சேவைகளை வழங்கியதால் கணினிகளை மலிவாகத் தரமுடிந்தது. போட்டி நிறுவனங்களும் வேறு வழியின்றி கணினி விலையைக் குறைத்தன.

வாடிக்கையாளர்கள் எளிதில் தொடர்புகொண்டு தங்கள் தேவைகள், குறைகளைத் தெரிவிக்க தொலைபேசி, இணையம், நேரடி சந்திப்பு என பல வசதிகளைச் செய்தார். அவர்களது குறைகளைப் போக்க உடனுக்குடன் நடவடிக்கை எடுத்தார். வாடிக்கையாளரின் திருப்தியை முழுமையாகச் சம்பாதிக்கும் நிறுவனம் என்ற நற்பெயரும் கிடைத்தது.

1987-ல் நிறுவனத்தின் பெயரை ‘டெல் கம்ப்யூட்டர் கார்ப்பரேஷன்’ என மாற்றினார். 1992-ல் ‘ஃபார்ச்சூன்’ இதழின் ‘டாப் 500’ நிறுவனங்கள் பட்டியலில் டெல் இடம்பிடித்தது. அப்போது இவருக்கு வயது 27. பட்டியலில் மிகவும் இளமையான தலைமை செயலதிகாரி (சிஈஓ) இவர்தான்.

1999-ல் டெல் நிறுவன உத்தி பற்றிப் புத்தகம் எழுதி வெளியிட்டார். மைக்கேல் சூஸன் அறக்கட்டளை மூலம் ஏழை, எளியவர்கல்வி, மருத்துவத்துக்கு உதவிவருகிறார்.

உலகப் பொருளாதாரப் பேரவை, சர்வதேச பிசினஸ் கவுன்சில், டெக்னாலஜி சிஈஓ கவுன்சில் ஆகியவற்றில் உறுப்பினராக இருக்கிறார். ‘மக்களின் தேவை அறிந்து, வாய்ப்புகளைக் கண்டறியுங்கள். அதை வெற்றியாக மாற்றுங்கள்’ என்ற இவரது தாரக மந்திரத்தின் அடிப்படையில் டெல் நிறுவனம் தொடர்ந்து வெற்றிநடை போடுகிறது.




**இலங்கையில் 22 கரட் (ஒரு பவுண்) தங்கத்தின் சந்தை விலை 1,63,800 ரூபா.**

**24 கரட் தங்கம் 1,78,600 ரூபாவுக்கு நேற்றைய தினம் விற்பனை செய்யப்பட்டது.**



# கேளுங்கள் தரப்படும்

**கேள்வி -** ஒரு பொருள் மலிவாக இருக்கின்றது என்பதால் மட்டும் விற்பனையில் சாதனை படைக்கும் என எதிர்பார்க்கலாமா?

எம்.மங்களேஸ்வரன்
பம்பலப்பிட்டி.

**பதில் -** நிச்சயமாக அவ்வாறு எதிர்பார்க்க முடியாது. முதலில் மக்களின் நம்பிக்கையைப் பெறவேண்டும். விலை குறைவாக இருக்கின்றது என்பதால் மட்டும் சந்தையில் வெற்றிபெற்றுவிட முடியாது.

ஒரு பொருளை உற்பத்தி செய்து விற்க தேவையான முக்கிய 3 காரணிகள் குறித்து ஜப்பான் கியோட்டோ பல்கலைக் கழக பேராசிரியர் மசாமி ஷிமிசூ தந்திருக்கும் விளக்கம். பயனுள்ளதாக இருப்பதால் அதனை உங்களுக்குத் தருகின்றோம்.

தமிழகத்துக்கு அண்மையில் வந்திருந்த அவர், கோவை பிஎஸ்ஜி தொழில்நுட்பக் கல்லூரியில் நடைபெற்ற கருத்தரங்கில் பொருள் உற்பத்தி மேம்பாடு மற்றும் வடிவமைப்பு நடைமுறைகள் என்ற தலைப்பில் உரையாற்றியபோது இது தொடர்பில் சில கருத்துக்களை தெரிவித்தார்.

பேராசிரியர் மசாமி ஷிமிசூ தெரிவித்தவை இவைதான்

உலகில் எந்தவொரு நாட்டை சேர்ந்த நிறுவனமும் தனது பொருட்களின் தயாரிப்பில் விலை, வாடிக்கையாளர் விருப்பம் உள்ளிட்ட பல்வேறு தர வரிசையைப் பட்டியலிட்டு சந்தையில் களம் இறங்குகின்றன. அதே வேளையில், குறைந்த விலையில் உருவாக்கப்பட்ட நானோ கார், இந்திய மக்களிடம் வரவேற்பைப் பெறவில்லை. அந்தக் கார் மலிவு விலை என்ற எண்ணம் தான் இதற்கு காரணம்.

எனவே, ஒவ்வொரு பொருளுக்கும் மதிப்பு என்பது முக்கியமாகும். ஜப்பானில் ரோபோடிக்ஸ் பயன்பாடு அதிகமாக உள்ளது. அங்கே வீடுகளை சுத்தம் செய்வது முதல் பெரிய தொழில் நிறுவனங்கள் வரை ரோபோடிக்ஸ் பயன்பாடு அதிகமாக உள்ளது.

இந்த ரோபோடிக்ஸ் இயந்திரங்கள்



சோர்வு இல்லாமல், விரைவாகவும், சீராகவும், எந்தவொரு சிக்கலான சூழலிலும் இயங்குகின்றன. எனவே, ஒரு பொருளை உற்பத்தி செய்து விற்பனை செய்ய வேண்டுமெனில் மதிப்பு முன்மொழிவு, தளம், தனித்துவமான வடிவம் ஆகிய மூன்று காரணிகளை முக்கியமாகப் பின்பற்ற வேண்டும், என்று அவர் தெரிவித்தார்.

எமது நாட்டிலும் புதிய உற்பத்திகளில் ஈடுபடுபவர்கள் இவற்றைக் கவனத்தில் கொள்வது நல்லது.

## கேளுங்கள் தருகின்றோம்

தமிழர் பொருண்மியம் வாசகர்கள் பொருளாதாரம் உட்பட அதனுடன் தொடர்புபட்ட தங்களுடைய கேள்விகளை - சந்தேகங்களை எமக்கு அனுப்பி வைக்கலாம். அடுத்த வாரம் முதல் அதற்கான களம் திறக்கப்படுகின்றது. உங்கள் கேள்விகளை அனுப்பிவைக்க வேண்டிய மின்னஞ்சல் முகவரி -
tamilseconomy@gmail.com




| | |
|---|---|
| கத்தரிக்காய் | - 180/= |
| உருளைக்கிழங்கு | - 160/= |
| பச்சைமிளகாய் | - 400/= |
| தக்காளி | - 300/= |
| மரவள்ளிக்கிழங்கு | - 120/= |
| கோவா | - 350/= |
| கரட் | - 600/= |
| பூசணி | - 200/= |
| புடோல் | - 150/= |
| வாழைக்காய் | - 200/= |
| சின்ன வெங்காயம் | - 250/= |
| பெரிய வெங்காயம் | - 400/= |
| பாகற்காய் | - 350/= |
| வெண்டிக்காய் | - 250/= |
| கருணைக்கிழங்கு | - 100/= |
| பயற்றங்காய் | - 200/= |
| லீக்ஸ் | - 300/= |
| கறிமிளகாய் | - 450/= |
| போஞ்சி | - 300/= |
| கீரை - 1 பிடி | - 80/= |
| தேசிக்காய் | - 150/= |




**வாங்கும் விலை**

| | |
|---|---|
| அவுஸ்திரேலியன் டொலர் - | 197/= |
| கனடா டொலர் - | 223/= |
| சீன யுவான் - | 42/= |
| யுரோ - | 329/= |
| ஜப்பான் யென் - | 2.0/= |
| சிங்கப்பூர்டொலர் - | 225/= |
| ஸ்ரோலிங் பவுண் - | 385/= |
| சுவிஸ் பிராங் - | 344/= |
| அமெரிக்க டொலர் - | 305/= |

**விற்கும் விலை**

| | |
|---|---|
| ஆஸ்திரேலியன் டொலர் - | 207/= |
| கனடா டொலர் - | 233/= |
| சீன யுவான் - | 44/= |
| யுரோ - | 343/= |
| ஜப்பான் யென் - | 2.1/= |
| சிங்கப்பூர் டொலர் | 236/= |
| ஸ்ரோலிங் பவுண் - | 400/= |
| சுவிஸ் பிராங் - | 362/= |
| அமெரிக்க டொலர் - | 315/= |

# சர்வதேச சந்தைகளில் இலங்கை இளநீருக்கு அதிகரிக்கும் கிராக்கி



அகிலன்

ஏற்றுமதியை இலக்காகக் கொண்டு, இரண்டாவது இளநீர் செய்கை கிராமம் முருதவெலரலுவ கிராமத்திற்கு அருகாமையில் நிறுவப்பட்டுள்ளது. விவசாய மற்றும் பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சர் மகிந்த அமரவீர தலைமையில் கடந்த ஞாயிற்றுக்கிழமை இந்த வேலைத்திட்டம் இடம்பெற்றது.

ஏற்றுமதிக்கு இளநீர் பயிரிடும் முதல் கிராமம் கடந்த ஆண்டு கீழ் முருதவெலியில் ஆரம்பிக்கப்பட்டதுடன் இவ்விரு கிராமங்களிலும் 10,000 இளநீர் மரக்கன்றுகள் நடப்படவுள்ளன. இதன் மூலம் எதிர்காலத்தில் இளநீர் ஏற்றுமதி மூலமாக இலங்கை அதிகளவு அந்நியச் செலாவணியைப் பெறக்கூடியதாக இருக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

ஐக்கிய அரபு இராச்சியத்தில் இலங்கையின் இளநீருக்கு அதிக கேள்வி காணப்படுவதாகவும், மேலும் பல நாடுகளில் இருந்து எமது நாட்டில் உற்பத்தி செய்யப்படும் இளநீருக்கு அதிக கேள்வி இருப்பதாகவும் விவசாய அமைச்சு அறிவித்துள்ளது.

இந்த சந்தைவாய்ப்பைப் பயன்படுத்திக் கொள்வதுடன், அதனை மேலும் மேம்படுத்திக்கொள்வதையும் இலக்காகக் கொண்டுதான் இலங்கை அரசாங்கம் இப்போது முயற்சிகளை முன்னெடுத்து வருகின்றது.

இளநீர் ஏற்றுமதி மூலமாக அதிகளவு வருமானத்தைப் பெறுவதற்கான வாய்ப்புக்கள் இருப்பது குறித்து சில வாரங்களுக்கு முன்னரும் "தமிழர் பொருண்மியம்" கட்டுரை ஒன்றை வெளியிட்டிருந்தமை வாசகர்களுக்கு நினைவிருக்கலாம். அந்த வகையில், இளநீருக்கான கேள்வி அதிகரித்துள்ள நிலையிலேயே இப்போது இரண்டாவது ஏற்றுமதிக் கிராமம் உருவாக்கப்படுகின்றது.

### வாரத்துக்கு 2,52,000 காய்கள்

வாரத்திற்கு சுமார் 252,000 இளநீர்கள் நாட்டிலிருந்து ஐக்கிய அரபு இராச்சியத்திற்கு ஏற்றுமதி செய்யப்படுகின்றன. 2022 ஆம் ஆண்டில் இளநீர் ஏற்றுமதி மூலம் இரண்டு பில்லியன் ரூபா வருமானம் ஈட்டப்பட்டுள்ளதுடன், கடந்த வருடம் எதிர்பார்த்த வருமானம் ஆறு பில்லியன் ரூபாவாகும். ஐக்கிய அரபு இராச்சியத்தில் இளநீர் ஒன்றின் விலை இலங்கை ரூபாவின் பெறுமதிக்கு அமைய 2000 ஆக விற்பனை செய்யப்படுகிறது.

இளநீர் இலங்கையின் பூர்வீகப் பயிராகும், பல நாடுகள் இளநீர் பயிரிட முயன்றாலும், இலங்கையின் இளநீர் போன்று அதிக சுவை இல்லாததால் அந்த முயற்சிகள் தோல்வியடைந்தன. இதன் காரணமாக, உள்நாட்டு இளநீருக்கு உலகச் சந்தையில் இலங்கையின் ஏகபோக உரிமை இன்னும் உள்ளது.

இந்த சூழ்நிலையில் இருந்து அதிகபட்ச இளநீரை அறுவடை செய்வதற்காக, குறிப்பாக முருதவெல பிரதேசத்தில் உள்ள பல கிராமங்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன. அதன்படி, இரண்டாவது இளநீர் செய்கை மாதிரி கிராமமாக ரலுவ கிராமம் நிறுவப்பட்டுள்ளதுடன் அங்குள்ள விவசாயிகளுக்கு 1,600 இளநீர் கன்றுகளை விவசாய அமைச்சர் வழங்கினார்.

### இரண்டாவது ஏற்றுமதி கிராமம்

ஏற்றுமதியை இலக்காகக் கொண்டு, இரண்டாவது இளநீர் செய்கை கிராமம் முருதவெல ரலுவ கிராமத்திற்கு அருகாமையில் விவசாய மற்றும் பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சர் மகிந்த அமரவீர தலைமையில் ஞாயிற்றுக்கிழமை நிறுவப்பட்டுள்ளது. ஏற்றுமதிக்கு இளநீர் பயிரிடும் முதல் கிராமம் கடந்த ஆண்டு கீழ் முருதவெலியில் ஆரம்பிக்கப்பட்டதுடன் இவ்விரு கிராமங்களிலும் 10,000 இளநீர் மரக் கன்றுகள் நடப்படவுள்ளன.

ஐக்கிய அரபு இராச்சியத்தில் இலங்கையின் இளநீருக்கு அதிக கேள்வி காணப்படுவதாகவும், மேலும் பல நாடுகளில் இருந்து எமது நாட்டில் உற்பத்தி செய்யப்படும் இளநீருக்கு அதிக கேள்வி இருப்பதாகவும் விவசாய அமைச்சு அறிவித்துள்ளது.

இந்த சூழ்நிலையில் இருந்து அதிகபட்ச இளநீரை அறுவடை செய்வதற்காக, குறிப்பாக முருதவெல பிரதேசத்தில் உள்ள பல கிராமங்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன. அதன்படி, இரண்டாவது இளநீர் செய்கை மாதிரி கிராமமாக ரலுவ கிராமம் நிறுவப்பட்டுள்ளதுடன் அங்குள்ள விவசாயிகளுக்கு 1,600 இளநீர் கன்றுகளை விவசாய அமைச்சர் வழங்கி வைத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

### மத்திய கிழக்கில் அதிக கிராக்கி

இலங்கை இளநீருக்கு மத்திய கிழக்கு நாடுகளில் அதிக கிராக்கி இருப்பதற்கு பல காரணிகள் இருக்கின்றன.

இலங்கை செவ்விளநீர்கள் வழக்கமான இளநீர்களிலிருந்து வேறுபட்ட இயற்கையாகவே இனிப்பு மற்றும் புத்துணர்ச்சியூட்டும் சுவைக்காக அறியப்படுகின்றன. பல்வேறு இனிப்பு மற்றும் புத்துணர்ச்சியூட்டும் பானங்களுக்குப் பழக்கப்பட்ட மத்திய கிழக்கு நுகர்வோரை இந்த தனித்துவமான சுவை ஈர்க்கிறது.

அதிக இளநீர் உள்ளடக்கம் உள்ளது, இது மத்திய கிழக்கில் நிலவும் வெப்பமான, வறண்ட காலநிலையில் நீரேற்றத்திற்கான இயற்கையான மற்றும் ஆரோக்கியமான தேர்வாக அமைகிறது.

பொதுவாக சில பகுதிகளில் நோய் எதிர்ப்பு சக்தியை அதிகரிப்பது, செரிமானத்தை மேம்படுத்துவது மற்றும் எடை நிர்வாகத்தில் உதவுவது உள்ளிட்ட பல்வேறு ஆரோக்கிய நலன்களுடன் தொடர்புடையது. உறுதியான அறிவியல் சான்றுகள் குறைவாக இருந்தாலும், உணரப்பட்ட ஆரோக்கிய நன்மைகள் அவற்றின் பிரபலத்திற்கு பங்களிக்கின்றன.

மத்திய கிழக்கு நாடுகள் பல்வேறு வகையான இளநீர்த்தேங்காய்களை உட்கொள்ளும் அதே வேளையில், இலங்கையின் செவ்விளநீர் ஒரு தனித்துவமான சுவையையும் அமைப்பையும் வழங்குகின்றன, இதனால் அவை தனித்துவமான மற்றும் விரும்பப்படும் விருப்பமாக அமைகிறது.

சில மத்திய கிழக்கு கலாச்சாரங்களில், குறிப்பிட்ட பண்டிகைகளின் போது அல்லது விருந்தோம்பலின் அடையாளமாக இளநீர் உட்கொள்வது வழக்கமாக உள்ளது. இதுபோன்ற காரணிகளால் மத்திய கிழக்கில் இலங்கையின் இளநீருக்கு நிரந்தரமான சந்தை உருவாகியிருக்கின்றது.

## வரி விளம்பரம்




## classified advertisement

பாடசாலை மாணவர்களுக்கான புத்தகப் பைகளை மிகத் தரமானதாகவும் குறைந்த விலையிலும் பெற்றுக்கொள்ள அழையுங்கள். - 0772034807

-------------------------------------

கிளிநொச்சியில் நியாயமான கட்டணத்தில் வடி ரக வாகனத்தை வாடகைக்கு அமர்த்தலாம். - தொடர்புகளுக்கு - 0776199969

-------------------------------------

ஆரோக்கியமான சிறந்த சருமத்தையும் அழகையும் முகப்பொலிவையும் பெற்றுக்கொள்வதற்கு மூலிகை மூலம் தயாரிக்கப்பட்ட சவர்க்காரங்களைப் பெற்றுக் கொள்ள எங்களை அழைக்கலாம். எங்களது உற்பத்திகளுக்கு நாங்களே உத்தரவாதம். 0763352782

-------------------------------------

நீங்கள் ஒரு தொழிலைத் தொடங்குவதற்கு ஆர்வமாக இருக்கிறீர்களா? எப்படி தொழிலை ஆரம்பிப்பது என்ற குழப்பம் உங்களுக்கு இருக்கிறதா? இன்றே எங்களை நாடுங்கள். உங்களது முதலீட்டிற்கு ஏற்ப சிறந்த வியாபாரத் திட்டத்தினை உருவாக்கித் தருவதோடு தொழில் தொடர்பான ஆலோசனைகளையும் உங்களுக்கு வழங்க முடியும். - 0753780530

-------------------------------------

வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யக் கூடிய தரத்திலான கருவாடுகளைப் பெற்றுக் கொள்வதற்கு அழைக்கவும்.
0778412785

-------------------------------------

சித்த ஆயுர்வேத முறைப்படி தயாரிக்கப்பட்ட சிறந்த ஔடதங்களைப் பெற்றுக் கொள்ள எங்களை அழைக்கவும்
0766996628

-------------------------------------

இந்தியாவிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட மிக்சிகளுக்குரிய (கிரைண்டர்) பாட்ஸ்களும் (Parts), சைக்கிள் (Cycle) உதிரிப் பாகங்களும் (Parts) மொத்தமாக விற்பனைக்குள்ளன.
தொடர்புகளுக்கு - 077 6566508.

-------------------------------------




### காணி விற்பனைக்கு

**A9** வீதியில் இருந்து **1km** தூரத்தில் எழுதுமட்டுவாழ் - நாகர்கோவில் வீதியில் 2 பரப்பு, 4 பரப்புக் காணிகள் விற்பனைக்கு. இயற்கையான சூழலில் உங்களின் ஓய்வுக் காலத்தினை அமைதியாகவும் ஆரோக்கியமாகவும் வாழ்வதற்கு ஏற்ற இடம். தொடர்புகளுக்கு 0779789177

-------------------------------------

மூலிகைத் தோட்டம் ஒன்றை மேற்பார்வை செய்வதற்கு ஓரளவு மூலிகைகளைப் பற்றிய அறிவும் தேக ஆரோக்கியமும் உள்ள ஒருவர் தேவை -
0772034807

-------------------------------------




### தேவை

யாழ்ப்பாணத்தில் இயங்கும் பிரபலமான பத்திரிகை நிறுவனத்திற்குச் சந்தைப்படுத்தல் முகாமையாளர் தேவை - 0773078799

-------------------------------------

திருநெல்வேலியில் உள்ள அப்பக்கடை ஒன்றிற்கு அப்பம் சுடுவதற்கு ஒருவர் தேவை. சம்பளம் பேசித் தீர்மானிக்கலாம். 077 118 1590

-------------------------------------

பண்ணை வேலைக்கு ஆள் தேவை. சம்பளமாகச் சுமார் 55,000/= வீடு கொண்டு செல்லக்கூடியதாகவும் EPF&ETF முழுவதும் எம்மால் கட்டப்படுவதுடன் உணவும் எம்மால் வழங்கப்படும். (தங்கி நின்று வேலைசெய்வதுடன் மாத விடுமுறையில் வீடு சென்று வரலாம்) தொடர்புக்கு 0773024473

-------------------------------------

இயந்திர மூலம் குழாய்க் கிணறு அமைத்துத் தரப்படும்.
0775652282

-------------------------------------

கிளிநொச்சி - அக்கராயனில் சோளன் பொத்திகளைச் சந்தைப்படுத்த முடியாமல் விவசாயி, கிருஸ்ணபிள்ளை கரன் என்பவர் அவதிப்படுகிறார். இன்னும் ஐயாயிரம் (5000) பொத்திகள் அவரிடம் உண்டு. தேவைப்படுபவர்கள் உடனடியாகத் தொடர்பு கொள்ளுங்கள்.
Krishnapillai Karan - 0773853765

-------------------------------------

Kk organic farm Pvt Ltd பனிச்சங்குளம். மாங்குளம். வவுனியா. பண்ணை வேலை வாய்ப்பு இப் பண்ணையில் கால்நடைகள், நெல் வயல், மரக்கறிகள், தேனீ வளர்ப்பு, மீன் வளர்ப்பு போன்ற செயற்பாடுகள் நடைபெற்ற வண்ணம் உள்ளது. இங்கு வேலை செய்வதற்கு ஆண் வேலையாட்கள் தேவை. வேலையாட்களுக்கு ரூபாய் 40,000/= சம்பளம் மற்றும் தங்குமிட வசதி மூன்று வேளை உணவு மற்றும் மாதத்திற்கு மூன்று நாட்கள் விடுமுறையும் வழங்கப்படும்.
தொடர்புக்கு - 0775789342
முகாமையாளர், KK organic farm Pvt Ltd.

-------------------------------------

திருமகள் நாட்காட்டி 2024 புதிய ஆண்டுக்குரிய நாட்காட்டிகள் (தினம்,மாதம்) மிகவும் குறைந்த விலையில் அச்சிட்டுத் தருகிறோம். நீங்கள் விரும்பும் வடிவங்கள் மற்றும் படங்களை அமைத்து பெறலாம்.
தொடர்பு: திருமகள் நாட்காட்டி
0777101894.

-------------------------------------

கிளிநொச்சியில் ஆரிக்கலையினைக் கற்றுக் கொள்வதோடு உங்களுக்குத் தேவையான (design) ஆடைகளுக்கு ஆரிவேலைகளும் செய்து கொடுக்கப்படும். தொடர்புகளுக்கு - 0769395457



# சுற்றுலாவிகளைக் கவரும் வடக்கின் தீவுகள் - 03



நிஷாந்தி பிரபாகரன்

## தொல்லியல் வரலாற்று பாரம்பரியம் கொண்ட நெடுந்தீவின் பெருமைகள்

குதிரை லாயங்கள் ஒல்லாந்தர்களால் குதிரைகள் கட்டுவதற்காகக் கட்டப்பட்ட பலதூண்கள் இன்றும் சாறாப்பிட்டிப் பகுதியில் காணப்படுகின்றன. இவை பலநூற்றாண்டுகளாகியும் முற்றாக அழிந்துவிடாமல் இன்றும் நிமிர்ந்த நிலையில காட்சியளிக்கின்றன. இவை குதிரை லாயங்கள் என அழைக்கப்படுகின்றன.

### குவின்ஸ் டவர்

ஒல்லாந்தரால் கட்டப்பட்ட இந்த மாவிலித் துறைமுகத்திலுள்ள உயரிய முக்கோண வடிவமாகக் கட்டப்பட்ட வெளிச்ச வீடு மூன்று உருளைத் தூண்களை ஒன்றின் மேல் ஒன்றாக வைத்துக் கட்டப்பட்டதுபோல் அமைவு பெற்று, அதன் மேல் கூம்பு வடிவமான ஒரு முடியும் காணப்படுகின்றது.

நெடுந்தீவை நோக்கி வரும் பெரிய கப்பல்கள் திசைமாறிச் செல்லாதிருக்க இது ஒரு திசைகாட்டிக் கோபுரமாக விளங்கியது. இன்று இக்கோபுரம் அழிந்த நிலையில் உள்ளதைக் காணலாம். மேலும் ஒவ்வொரு வகையான வெளிச்ச வீடுகளும் கப்பல் திசை மாறாது செல்வதற்கு ஒவ்வொரு வகையான ஒளிச்சமிக்ஞைகளைக் கொண்டு இந்த வெளிச்ச வீடு 20 அடி உயரத்தில் அமைந்துள்ளது.

### பூதம் வெட்டிய கிணறுகள்

சாறாப்பிட்டி கோளாங்கற் பாறைகளின் மத்தியில் பொழியப்பட்ட சில நன்னீர்க் கிணறுகள காணப்படுகின்றன. சுமார் முப்பது கிணறுகள் வரை ஒன்றுக்கொன்று மிக அண்மையில் காணப்படுகின்றன.

இவை ஒவ்வொன்றும் சுமார் பத்தடி ஆழமுடையன. சில கிணறுகளை இணைத்துக் கட்டிய வடிகால்களும் நீர்த்தொட்டிகளும் சிதைந்த நிலையில் காணப்படுகின்றன. குதிரைகளுக்காகவே இக்கிணறுகள் வெட்டப்பட்டன என அறியப்படுகிறது.

இவை இயந்திரங்கள் இல்லாத காலத்தில் பொழியப்பட்டிருப்பதால் இவை மனித வலுவுக்கப்பாற்பட்ட ஒரு சக்தியினால்தான் வெட்டப்பட்டிருக்க வேண்டுமென மக்கள் கருதுவதால் இவற்றைப் பூதம் வெட்டிய கிணறுகள் என அழைக்கின்றார்கள். இவற்றில் சில கிணறுகளிலிருந்தே தீவிற்கான குடிநீர், குழாய்கள் மூலம் விநியோகிக்கப்படுகிறது.

### 40 அடி மனிதனின் காலடி

நெடுந்தீவு மேற்கில் சாறாப்பிட்டி கோளாங்கற்பாறைகளின் மத்தியில் ஒரு பெரிய மனிதனின் பாதம் காணப்படுகிறது. இது சாதாரண மனிதர்களின் பாதங்களை விட மிகவும் பெரிதாகக் காணப்படுவதால் நாற்பதடி மனிதனின் கால் பாதம் எனக் கூறப்படுகிறது. அத்துடன் இப்பாதத்தை இராமபிரானின் கால்பாதமெனவும் சிலர் கூறுகிறார்கள்.

### பழமை வாய்ந்த ஆலமரம்



நெடுந்தீவின் கிழக்கே பிள்ளையார் கோவிலின் அருகே நூறாண்டுகளுக்கு மேல், பழமைவாய்ந்த ஒர ஆலமரம் பெரிய விருட்சமாக அரை மைல் விஸ்தீரணத்திற்குக் கிளைகளைப் பரப்பிப் படர்ந்து காணப்படுகிறது. இதன் இலைகளை ஆடு மாடுகள் உண்பதில்லை. இதன் அருகே ஓர் பிள்ளையார் கோவில் அமைந்துள்ளது. இவ்வாலயம் ஆலமாவனப் பிள்ளை யார் ஆலயமென அழைக்கப்படுகிறது.

### அரசனைய அரசு

நெடுந்தீவின் மேற்கிலுள்ள புக்காட்டு வைரவர் கோவிலின் அருகே பல நூறு வருடங்கள் பழமை வாய்ந்த பெரிய அரச மரம் ஒன்றுள்ளது. இது மூன்று ஏக்கர் நிலம் வரை வியாபித்துள்ளது. கிளைகள் நீண்டு வளைந்து நிலத்தில் பொறுத்து பின் மேலோங்கி வளருகின்றது.

### பெருக்கு மரம்

நெடுந்தீவு இறங்கு துறையிலிருந்து கிழக்காக சுமார் 2.5 கிலோ மீற்றர் தூரத்தில் காணப்படும் பெருக்கு மரம் நூற்றாண்டுகள் பழமையானது எனக் கூறப்படுகிறது. இதன் அடிமரம் மிகவும் விசாலமானது. இம்மரத்தில் உள்ள துளை வழியே உள்ளே சென்றால் அங்கே குகை போன்ற அமைப்பு உள்ளது. இங்கு ஒரு குடும்பம் நிற்கக்கூடிய இட வசதி உள்ளது. இதன் பூக்கள் வெண்மை நிறமாகவும், காய்கள வட்டமான பச்சை நிறமாகவுமுள்ளன.

இத்தகைய மரங்கள் இலங்கையிலே மிகச் சிலவே உள்ளன எனக் கூறப்படுகிறது. இம்மரங்கள் கிழக்கு ஆபிரிக்காவைச் சேர்ந்த அரேபிய வியாபாரிகளால் ஏழாம் நூற்றாண்டளவில் இலங்கைக்குக் கொண்டு வரப்பட்டன என அறியப்படுகிறது. இவை இன்று பெரும்பாலும் காலநிலை மாற்றங்களால் அழிந்து கொண்டு செல்கின்றன எனக் கூறப்படுகிறது.

### மணல் கடற்கரை

இது நெடுந்தீவின் மத்தியில் வடகடற்கரையில் அமைந்துள்ளது. மணல் வெள்



ளையாகக் கடற்கரை நீளத்துக்குப் பரந்து காணப்படுகிறது. இதனருகேயுள்ள கடல், கற்பார்கள் அற்றதாகவும், குளிப்பதற்கும், நீந்துவதற்கும் இதமானதாகவும் அமைந்துள்ளது. இதனருகே பல நன்னீர்க் கிணறுகளும் கட்டப்பட்டுள்ளன. இதனருகேதான் ஒல்லாந்தர் கோட்டையும் அமைந்திருந்தது. இக்கடற்கரை சுற்றுலாப் பயணிகளை மிகவும் கவர்ந்து வரும் ஓர் இடமாகும்.

### வெல்லைக் கடற்கரை

நெடுந்தீவின் தெற்கே வெல்லைக் கடற்கரை அமைந்துள்ளது. இதன் கரைகள் பெரிய பாறைக்கற்களாகவும் மணற்பாங்காகவும் உள்ளது. வெளியூர்களிலிருந்து காலத்திற்குக் காலம் மீன் பிடிப்பதற்காக வரும் மீனவர்கள் இக்கரை நீளத்திற்குத் தங்கள் வாடிகளை அமைத்திருப்பதைக் காணலாம். வடகீழ்ப் பருவப்பெயர்ச்சிக் காற்றுக் காலங்களில் இப்பகுதிக் கடல் மிக அமைதியாகவிருக்கும்.

இக்காலங்களில் கட்டுமரங்களிலும், மோட்டார் வள்ளங்களிலும் பல நூற்றுக் கணக்கான மீனவர்கள் மீன்பிடிக்கச் சென்று, திரும்பிவரும் காட்சிகளும், மீன்கள் வாங்கப் பணத்துடனும், பண்டமாற்றுப் பொருட்களுடனும் மக்கள் கூடும் காட்சிகளும், ஒரு தனி அழகாகவிருக்கும். இக்கடற்கரையை அண்டிய புல்வெளிகளிலேயே குதிரைகளையும் கூட்டம், கூட்டமாகக் காணலாம்.

### புறாக்கூடு



நெடுந்தீவுப் பகுதியில் இன்றும் J/3 பிரிவில் இவ்வஞ்சல் கோபுரம் காணப்படுகின்றது. காலனித்துவ காலத்தில் அஞ்சல் தொடர்பாடல்களை மேற்கொள்வதற்காக ஒல்லாந்தர்களால் கட்டப்பட்டதே இவ் புறாக்களின் கோபுரம். இன்றும் நெடுந்தீவுப் பகுதியில் அழிவடைந்த நிலையில் புறாக்களின் கோபுரம் அமைந்துள்ளது. இது மிகவும் பழமையான பாரம்பரியமான கோபுரமாகும் இது சுற்றுலாப் பயணிகளை கவரும் ஒரு கோபுர அமைப்பாகும்.

### கல்வேலி

நெடுந்தீவில் கல்வேலி அதிகமான வீடுகளில் காணப்படுகின்றன.

### வளரும் கல்

நெடுந்தீவு பிரிவில் இவ் வளரும் அம்மன் கல் இன்றும் காணப்படுகின்றது. இக் கல் மிகவும் பழமையான சிறப்பான






கல் ஆக விளங்குகின்றது. பழமையானதும் தொன்மையானதுமான இக் கல் நெடுந்தீவில் சுற்றுலாப் பயணிகளை கவரும் ஓர் மையமாகும். இக் கல் அம்மன் சிலையைப்போல் தானாகவே வளர்ந்து காணப்படுகின்றது. சுற்றுலாவின் வளர்ச்சிக்கு இக் கல்லும் அரிய அம்சமாக நெடுந்தீவில் விளங்குகின்றது.

### தொல்லியல் பாரம்பரியம்

தொல்லியல் வரலாற்றுப் பாரம்பரியம் கொண்ட இத்தீவு விவசாயம், கால்நடை, கடல் வளங்களுடன் உள்ளது. 1813ம் ஆண்டு நெடுந்தீவு கடலில் இருந்து புறப்பட்ட ஹீர்த் டீ போலோ (hearth De Polo) எனும் ஐக்கிய அமெரிக்க இளைஞன் இத்தீவின் அழகையும், வளங்களையும் மனதில் கொண்டு இது தனி ஒரு நாட்டுக்கு சொந்தமானதல்ல! இந்த பிரபஞ்சத்திற்கே சொந்தமானது என்று கூறினாராம்.

தரைப் பரப்பிலும் மண்பரப்பைவிடவும் கற்பரப்பு மிகமிக அதிகமானது. அங்கு வாழ் மக்களின் உடலுரம் எதற்கும் முகம் கொடுக்கும் நெஞ்சுரம் எனும் பண்புகளின் அடித்தளமே இப் பாறைகளோ என்ற கேள்வி எழுமளவுக்கு இந்தக் கற்பரப்போடு மூதாதையர் போராடியிருக்கிறார்கள்.

இலங்கையின் வடபகுதித் தீவுகள் அனைத்தும் இந்துமகாசமுத்திரம் வங்காளக் குடாக்கடல் அரபிக் கடல் எனும் முப்பெரும் பாரிய நீர்ப்பரப்புகளின் இடையே நிலைகொண்டவை வட தென் பருவக் காற்றுக்கள் ஓயாது நீண்ட தூரம் தள்ளி வரும் வேகமான அலைகளுக்கு முகம் கொடுத்தும் தொடர்ந்து வாழும் கரைக் கட்டுமானமுடையவை.

இவை தமது இருப்பை இதுவரை பேணுவது என்பது கற்களின் வலிமையால் மட்டுமே! அதிலும் கற்களின் வலிமையின் விசேடத் தன்மை அகமும் புறமும் நெடுந்தீவுக்கு சற்று அதிகமாகவே உள்ளது.

அடுத்த வாரம் மற்றுமொரு சுற்றுலாவிகளைக் கவரும் இடமொன்றுக்கு உங்களை அழைத்துச் செல்கின்றோம்.



**1813ம் ஆண்டு நெடுந்தீவு கடலில் இருந்து புறப்பட்ட ஹீர்த் டீ போலோ (hearth De Polo) எனும் ஐக்கிய அமெரிக்க இளைஞன் இத்தீவின் அழகையும், வளங்களையும் மனதில் கொண்டு இது தனி ஒரு நாட்டுக்கு சொந்தமானதல்ல! இந்த பிரபஞ்சத்திற்கே சொந்தமானது என்று கூறினாராம்.**




# நுண்பாக, சிறிய மற்றும் நடுத்தர நிறுவன துறையினருக்கு கடன்



AGS. சுவாமிநாதன் சர்மா
பட்டயக்கணக்காளர்,
வரி முகாமைத்துவ ஆலோசகர்

நாட்டின் பொருளாதார மீட்சிக்கு ஆதரவளிக்கும் ஒரு குறிப்பிடத்தக்க நடவடிக்கையாக, நுண்பாக, சிறிய மற்றும் நடுத்தர நிறுவன (MSME) துறையின் மறுமலர்ச்சியை இலக்காகக் கொண்ட கடன் திட்டத்திற்கு இலங்கை அமைச்சர்கள் அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது. பெப்ரவரி 26, 2024 அன்று எடுக்கப்பட்ட முடிவு, நடந்து வரும் பொருளாதார வீழ்ச்சிக்கு மத்தியில் போராடும் MSME களுக்கு மிகவும் தேவையான நிதி உதவியை வழங்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

### MSMEகள் எதிர்கொள்ளும் சவால்கள்

இலங்கையின் பொருளாதாரத்தின் முதுகெலும்பான MSME துறையானது அண்மைக் காலமாக பல சவால்களை எதிர்கொண்டுள்ளது. உற்பத்தி, இறக்குமதி, ஏற்றுமதி, சுற்றுலா, ஆடை மற்றும் பிற துறைகளில் செயல்படும் சிறிய மற்றும் நடுத்தர அளவிலான வணிகங்களுக்கு வெளிப்புற காரணிகளால் இணைந்த நீடித்த பொருளாதார வீழ்ச்சி கடினமாக உள்ளது.

### ஆசிய அபிவிருத்தி வங்கியுடன் (ADB) கூட்டு

ஆசிய அபிவிருத்தி வங்கியுடனான கூட்டு நிவாரணம் வழங்கும் முயற்சியில், சிக்கலில் உள்ள MSME துறைக்கான செயல்பாட்டு மூலதன ஆதரவைப் பெறுவதற்கு இலங்கை அரசாங்கம் ஆசிய அபிவிருத்தி வங்கியுடன் (ADB) கூட்டு சேர்ந்துள்ளது. கடன் திட்டம் இந்த நிறுவனங்களுக்கு உரிமம் பெற்ற வணிக மற்றும் சிறப்பு வங்கிகள் மூலம் கடன் வசதிகளை வழங்க வடிவமைக்கப்பட்டுள்ளது, மேலும் அவர்களின் வணிகங்களை விரிவுபடுத்தவும் மீட்டெடுக்கவும் உதவுகின்றது.

### திட்ட விவரங்கள்

இந்த விரிவான திட்டத்துக்கு மொத்தம் ரூ.20 பில்லியன் நிதியம் ஒதுக்கப்படும், மேலும் ரூ.15 பில்லியன் தற்போதுள்ள மற்றும் புதிய MSME முயற்சிகளை வலுப்படுத்த அர்ப்பணிக்கப்பட்டுள்ளது. மீதம் உள்ள ரூ. 5 பில்லியன், செயல்படாத கடன்களின் சுமையின் கீழ் போராடும் நிறுவனங்களுக்கு உதவுவதற்காக குறிப்பாக செலுத்தப்படும்.

### அரசாங்கத்தின் அர்ப்பணிப்பு

கடன் திட்டத்திற்கு அமைச்சரவையின் ஒப்புதல், MSME துறையை மேம்படுத்துவதற்கும் அதன் மீட்சியை எளிதாக்குவதற்கும் அரசாங்கத்தின் அர்ப்பணிப்பை அடிக்கோடிட்டுக் காட்டுகின்றது. இந்த முடிவைப் பற்றி பேசிய நிதி, பொருளாதார ஸ்திரப்படுத்தல் மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சர், நாட்டின் பொருளாதார முன்னேற்றத்தில் MSMEகளின் முக்கிய பங்கை வலியுறுத்தினார்.

### எதிர்பார்த்த தாக்கம்

கடன் திட்டம் MSME துறையில் தொலைநோக்கு நேர்மறையான தாக்கத்தை ஏற்படுத்தும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. கட்டுப்படியாகக்கூடிய கடனுக்கான அணுகலை வழங்குவதன் மூலம், இத்திட்டமானது இந்த வணிகங்களுக்கு நிதித் தடைகளை கடக்கவும், வளர்ச்சியில் முதலீடு செய்யவும் மற்றும் இலங்கையின் ஒட்டுமொத்த பொருளாதார மறுமலர்ச்சிக்கு பங்களிக்கவும் வலுவூட்டும்.

கடன் திட்டம் நடைமுறைப்படுத்தப்படுவதையும் இலங்கையில் MSME துறையில் அதன் தாக்கத்தையும் நிதி அமைச்சர் தொடர்ந்து கண்காணிப்பார்.

### தகுதி வரம்பு / அளவுகோல்கள்:

முழு விவரங்கள் இன்னும் வெளியிடப்படவில்லை என்றாலும், திட்டத்தில் பங்கேற்பதற்கு எந்த MSMEகள் தகுதி பெறுகின்றன என்பதை தீர்மானிக்க குறிப்பிட்ட தகுதி அளவுகோல்கள் நிறுவப்படும் என்பதைக் குறிப்பிடுவது முக்கியமானது. இந்த அளவுகோல்கள் வணிக அளவு, துறை, நிதி நிலை மற்றும் வளர்ச்சிக்கான சாத்தியம் போன்ற காரணிகளை உள்ளடக்கியிருக்கலாம்.

### வட்டி விகிதங்கள்:

இத்திட்டத்தின் மூலம் வழங்கப்படும் "சலுகை வட்டி விகிதங்களுக்கான" முன்மொழிவுக்கு அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது. இந்த விகிதங்கள் பற்றிய

கூடுதல் தகவல்களை வழங்குவது, கிடைக்கும் பட்சத்தில், MSMEகளை முழுமையாக மேம்படுத்தும்.

**காலவரிசை மற்றும் விண்ணப்ப செயல்முறை:**

நிரலின் காலவரிசை, அதன் வெளியீட்டு தேதி மற்றும் எதிர்பார்க்கப்படும் காலம் உள்ளிட்ட விவரங்களைப் பெறுவது பயனுள்ளதாக இருக்கும். கூடுதலாக, கடன் வசதிகளை அணுக MSMEகளுக்கான விண்ணப்ப செயல்முறையைத் தொடங்குவது பயனுள்ளதாக இருக்கும்.

**சாத்தியமான நன்மைகள்:**

நிதி உதவிக்கு அப்பால், பங்குபெறும் MSME களுக்கு கடன் திட்டம் கூடுதல் பலன்களை வழங்க முடியும். தொழில்நுட்ப உதவி, வணிக மேம்பாட்டுப் பட்டறைகள் அல்லது வழிகாட்டுதல் திட்டங்கள் போன்ற சாத்தியமான நன்மைகளை ஆராய்வது கட்டுரையின் உள்ளடக்கத்தை மேம்படுத்தும்.

இலங்கையின் தற்போதைய பொருளாதார காலநிலையில் MSME கடன் திட்டத்தின் சாத்தியமான நன்மைகள்:

**நிதி நிவாரணம் மற்றும் வளர்ச்சி:**

• மலிவுக் கடனுக்கான அணுகல்: இது MSMEகள் எதிர்கொள்ளும் ஒரு முக்கியமான சவாலை நிவர்த்தி செய்கின்றது, நிதிக் கட்டுப்பாடுகளை சமாளிக்கவும், வளர்ச்சியில் முதலீடு செய்யவும், செயல்பாட்டுத் திறனை மேம்படுத்தவும் அனுமதிக்கின்றது.

• கடன் மறுசீரமைப்பு: செயல்படாத கடன்களுக்கான அர்ப்பணிப்பு ஒதுக்கீடு, போராடும் நிறுவனங்கள் தங்கள் கடனை மறுசீரமைக்கவும், நிதி ஸ்திரத்தன்மையை மீண்டும் பெறவும், மீண்டும் வளர்ச்சிப் பாதையில் நுழையவும் உதவும்.

**வேலை உருவாக்கம் மற்றும் பொருளாதார செயல்பாடு:**

• வணிக விரிவாக்கம் மற்றும் மறுமலர்ச்சி: MSMEகளின் விரிவாக்கம் மற்றும் மீட்சியை எளிதாக்குவதன் மூலம், இத்திட்டம் புதிய வேலை வாய்ப்புகளை உருவாக்கி, பொருளாதார நடவடிக்கையை அதிகரிக்க பங்களிக்கும் திறனைக் கொண்டுள்ளது.

• உள்நாட்டுத் தேவையைத் தூண்டுதல்: MSMEகள் வலுவடைந்து விரிவடைவதால், அவற்றின் அதிகரித்த உற்பத்தி மற்றும் விற்பனையானது உள்நாட்டுத் தேவையைத் தூண்டி, ஒட்டுமொத்தப் பொருளாதாரத்தில் நேர்மறையான பெருக்க விளைவை ஏற்படுத்துகின்றது.

**மேம்படுத்தப்பட்ட போட்டித்திறன் மற்றும் புதுமை:**

• தொழில்நுட்பம் மற்றும் திறன்களில் முதலீடு: கடனுக்கான அணுகல், உள்நாட்டு மற்றும் சர்வதேச சந்தைகளில் அவர்களின் போட்டித்தன்மையை மேம்படுத்தி, நவீன தொழில்நுட்பங்கள் மற்றும் திறன் மேம்பாட்டில் முதலீடு செய்ய MSMEகளுக்கு உதவும்.

• புதுமை மற்றும் பல்வகைப்படுத்தல்: இத்திட்டம் MSME துறையில் புதுமை மற்றும் தயாரிப்பு பல்வகைப்படுத்தலை ஊக்குவிக்கும், இது சந்தை தேவைகளை பூர்த்தி செய்யும் புதிய தயாரிப்புகள் மற்றும் சேவைகளை உருவாக்க வழிவகுக்கும்.

**சமூகத் தாக்கம் மற்றும் வறுமைக் குறைப்பு:**

• தொழில்முனைவோரை மேம்படுத்துதல்: நிதியுதவி அளிப்பதன் மூலமும், வணிக வளர்ச்சியை ஊக்குவிப்பதன் மூலமும், இந்தத் திட்டம் தொழில்முனைவோர், குறிப்பாக பெண்கள் மற்றும் இளைஞர்களுக்குப் பொருளாதாரத்தில் குறிப்பிடத்தக்க பங்களிப்பை அளிக்கும்.

• வாழ்வாதார மேம்பாடு: புதிய வேலைகளை உருவாக்குதல் மற்றும் அதிகரித்த பொருளாதார செயல்பாடு ஆகியவை MSME துறையுடன் தொடர்புடைய தனிநபர்கள் மற்றும் குடும்பங்களுக்கு மேம்பட்ட வாழ்வாதாரத்திற்கு வழிவகுக்கும், இது வறுமைக் குறைப்பு முயற்சிகளுக்கு பங்களிக்கின்றது.

MSME கடன் திட்டத்திற்கு இலங்கை அமைச்சரவையின் அங்கீகாரம் இந்த முக்கியமான துறையின் மறுமலர்ச்சிக்கு ஆதரவளிப்பதற்கான வலுவான அர்ப்பணிப்பைக் குறிக்கின்றது. மலிவுக் கடனுக்கான அணுகலை வழங்குவதன் மூலமும், தொழில்நுட்ப உதவி போன்ற கூடுதல் பலன்களை வழங்குவதன் மூலமும், இந்த முயற்சி MSMEகளை மேம்படுத்துவதற்கும், பொருளாதார நடவடிக்கைகளைத் தூண்டுவதற்கும் மற்றும் வேலை வாய்ப்புகளை உருவாக்குவதற்கும் பெரும் ஆற்றலைக் கொண்டுள்ளது.

எவ்வாறாயினும், இத்திட்டத்தின் செயல்திறன் அதன் திறமையான அமுலாக்கம், தெளிவான தகுதி அளவுகோல்கள் மற்றும் வெளிப்படையான தொடர்பாடல் ஆகியவற்றில் பரவலான அணுகலை உறுதிசெய்து, இலங்கையின் பொருளாதார மீட்சிப் பயணத்தில் அதன் நேர்மறையான தாக்கத்தை அதிகப்படுத்துகின்றது. நிரல் வெளிவரும் போது, அதன் இலக்குகளை அடைவதில் அதன் வெற்றியை உறுதிப்படுத்த, நெருக்கமான கண்காணிப்பு மற்றும் தொடர்ச்சியான மதிப்பீடு ஆகியவை முக்கியமானதாக இருக்கும்.

ஒட்டுமொத்தமாக, MSME கடன் திட் டம் திறம்பட நடைமுறைப்படுத்தப்பட்டால், இலங்கையின் பொருளாதார மீட்சியில் முக்கியமான பங்கை வகிக்கும் ஆற்றலைக் கொண்டுள்ளது. இத்திட்டத்தின் வெற்றியானது திறமையான செயல்படுத்தல், வெளிப்படைத்தன்மை மற்றும் இலக்கு பயனாளிகளுக்கான அணுகல் உள்ளிட்ட பல்வேறு காரணிகளைப் பொறுத்தது என்பதைக் கவனத்தில் கொள்ள வேண்டும்.

+94-777-802-900
Email: swaminathan@agsarma.com

**ஒட்டுமொத்தமாக, MSME கடன் திட்டம் திறம்பட நடைமுறைப் படுத்தப்பட்டால், இலங்கையின் பொருளாதார மீட்சியில் முக்கியமான பங்கை வகிக்கும் ஆற்றலைக் கொண்டுள்ளது. இத்திட்டத்தின் வெற்றியானது திறமையான செயல்படுத்தல், வெளிப்படைத் தன்மை மற்றும் இலக்கு பயனாளிகளுக்கான அணுகல் உள்ளிட்ட பல்வேறு காரணிகளைப் பொறுத்தது என்பதைக் கவனத்தில் கொள்ள வேண்டும்.**



அமல்ராஜ் பிரான்சிஸ் - மூலம்

# ஒரு கனவு நிஜமாகிறது

நேர்கண்டவர்
ஞானம் கவினி

புலம்புயர்ந்த பெற்றோர்களுக்கு பிறந்த ஒரு தமிழச்சி என்று வைத்துக் கொள்வோம். தமிழ் அவளுடைய பெயர்.

ஒரு தங்கச்சி, அம்மா அப்பா, அவ்வளவுதான் அவள் குடும்பம்.

சிறியவளாக இருக்கும்போது, மிகச் சாதாரண விவசாய பின்னணியில் உள்ள அவளுடைய தந்தை அழகான ஒரு பிரதேசத்தில் நாற்பது ஏக்கர் நிலத்தை வாங்கிப்போடுகிறார்.

அப்போது அவ்விடத்தில் நிலத்தின் பெறுமதி அப்படியொன்றும் தங்கமில்லை, ஆனால் இப்போது இப்பிரதேசம் சுற்றுலாத் தளங்களில் ஒன்று. தங்கத்தை விஞ்சும் பெறுமதி.

இப்போது அது கனவிலும் சாத்தியமில்லை. இங்கு நான் சொல்ல வருவது, நம்மில் அதிகமானோரிடம் மருந்துக்கும் இல்லாததமிழின் தந்தையின் தூர நோக்கு! சரி, நாற்பது ஏக்கரை எதற்கு வாங்கினார்?

நம் ஊர் என்றால் விடையை இலகுவாக ஊகித்துவிடுவீர்கள். இரண்டு பெண் பிள்ளைகள். இருபது இருபது சீதனம், அப்படித்தானே? ஆனால் இங்கு அவர் வாங்கிய நாற்பது ஏக்கர் நிலம், விவசாயம் செய்ய வேண்டும் என்கிற அவருடைய கனவை மெய்ப்பிப்பதற்கு.

ஆமாம், அதுவும் அந்தக் கனவுக்குப் பின்னாலிருப்பது ஓர் அற்புதமான காதல் கதை. அவருடைய மனைவி இயற்கை விரும்பி ,இயற்கைத்தளங்களை பார்ப்பதற்கும் இயற்கையாக விளையும் பழங்கள் காய்கறிகளை உண்பதற்கும் மிகவும் விருப்பமுடையவர்.

தனது மனைவிக்காக அதை தானே செய்தால் எப்படி இருக்கும் என்று யோசித்தார்.

கணவனே அதை உற்பத்தி செய்து கொண்டால் எப்படியிருக்கும்? ஆக, இது வெறும் வருமானம் ஈட்டும் தொழில் முயற்சி மட்டுமில்லை, மனைவிக்காக அவளுடைய ஆசையின் மேட்டில் ஒரு சாம்ராஜ்ஜியத்தை உருவாக்குவது. கூடவே, அதிகம் முயற்சிக்கப்படாத, வெற்றியளிக்காத ஒரு வியாபாரத்தை முயற்சிப்பது.

இந்த முயற்சி வெற்றியளித்தால் அதுவொரு அற்புதமான வின்-வின் முயற்சி. ஆனால் அங்குதான் சிக்கலிருந்தது. இயற்கை விவசாயம் என்பது தேங்காய் மாங்காய் விற்கும் வியாபாரமல்ல. மிகவும் சிக்கலானது.

அனுபவமிக்க-தேர்ந்தவர்களை தேடுவது, தோட்டம்-தொழிற்சாலையை வெற்றிகரமாகக் கொண்டு இழுப்பது, காலநிலைக் கூர்மைகொண்ட சிக்கலான பயிர்களை பாராமரிப்பது, அதிகம் பிரசித்தமற்ற ஒரு புதிய சந்தையை உருவாக்குவது, ஏற்றுமதி, விலை மற்றும் சமநிலையை சமாளிப்பது என்று ஏகப்பட்ட சிக்கல்கள்.

தவிர, இத்தனையையும்வெற்றிகரமாகச் செய்துமுடிக்க ஓர் ஆணும் மூன்று பெண்களும் கொண்ட குடும்பம் ஒன்றால் சாத்தியமா?

எப்படிப்பார்த்தாலும் குறிப்பிடக்கூடிய அளவு வளர்ச்சி கண்ட சமூகம் இது. அதிகம் இல்லாவிட்டாலும், நம்முடைய ஊர்ப் பிரச்சினைகளில் ஒன்றே ஒன்று மட்டும் அந்தத் தந்தைக்கும் இருந்தது. ‘

இரண்டு பெட்டைக் குட்டிகளை மட்டும் பெற்று வைத்திருக்கிறேன். ஒரு பையன் இல்லை. எப்படி இந்த வியாபாரத்தைக் கொண்டிழுப்பது?!' அப்போதுதான் அந்தச் சிறுமைத்தனமான புத்தியை செருப்பால் அடிப்பதுபோல முன்னால் வந்து நின்றாள் சிறுமி தமிழ்.

‘அன்பு அப்பா, நானும் தங்கச்சியும்



இருக்கிறோம். எதுக்கும் யோசிக்க வேண்டாம். இப்போதைக்கு - நாங்கள் சிறுவர்கள் - உங்களால் முடிந்த அளவு செடிகளை நட்டுப் பராமரியுங்கள். மீதியையும், எதிர்காலத்தையும் நான் பார்த்துக்கொள்கிறேன்!'

அப்போதே தந்தைக்கு உயரமாகத் தெரிந்தாள் தமிழ்.

அவள் பாடசாலைக் கல்வியை முடித்துக்கொண்டு அவுஸ்ரேலியாவின் முக்கியமான ஒரு பல்கலைக்கழகத்தில் தன் மேற்படிப்பைத் தொடர்வதற்காகப் புறப்படுகிறாள். அவள் தெரிவுசெய்த மேற்படிப்பு எந்தத் துறையில் என்று நினைக்கிறீர்கள்? வைத்தியத்துறை? பொறியியல்? சட்டவியல்? இத்யாதி இத்யாதி? இல்லை. Enology! வைன் மற்றும் வைன் உற்பத்தி பற்றிய படிப்பு. தாய்லாந்தில் Enology பட்டம் பெற்ற முதல் நபர், பெண் இன்னும்இவள் தான்.

இதைக் கேட்ட போது சுவாரஷ்யமாக இருந்தது. யாருக்கும் அதிகம் தெரியாத துறை. தொழில் துறையையும் எதிர்காலத்தையும் வைத்துக்கொண்டு தீர்மானிக்கப்படும் மேற்படிப்பு. நாம் பார்க்கும் தொழிலில் வெறும் மேலோட்டமான அறிவு அல்ல, மாறாக நாம் பாண்டித்தியம் பெற்றிருக்க வேண்டும் என்கிற தாகம். தவிர, மற்றவர்களின் வெட்டிப் பேச்சிற்கும், உப்புச்சப்பற்ற விமர்சனங்களுக்கும் காதுகொடுக்காது, தனக்கு எது வேண்டுமோ அதில் மட்டும் அகச்சுத்தியோடும், பெரும் நம்பிக்கையோடும், உறுதியோடும் இருந்து கொள்ளும் ஓர்மம். நான்கு வருட பட்டப் படிப்பை முடித்து தாயிடம் வந்து சேர்கிறாள் தமிழ்.

இது நடந்து இப்போது 15 வருடங்கள் ஆகிவிட்டன. தற்போது தமிழின் தந்தை ஓய்வில் இருக்கிறார். தமிழும் அவளுடைய தங்கையும் இதை வெற்றிகரமாக நடாத்திக்கொண்டிருக்கிறார்கள்.

தமிழ், அதிசயப் பெண்ணெல்லாம் இல்லை. சாதாரண பெண்தான். என்ன, தன் இயலுமையைச் சரியாகப் புரிந்து கொண்டவள். தன் பயணத்தைச் சரியாகத் தெரிவு செய்துகொண்டவள்.

**"அன்பு அப்பா, நானும் தங்கச்சியும் இருக்கிறோம். எதுக்கும் யோசிக்க வேண்டாம். இப்போதைக்கு - நாங்கள் சிறுவர்கள் - உங்களால் முடிந்த அளவு செடிகளை நட்டுப் பராமரித்துக்கொள்ளுங்கள். மீதியையும், எதிர்காலத்தையும் நான் பார்த்துக்கொள்கிறேன்!' அப்போதே தந்தைக்கு உயரமாகத் தெரிந்தாள் தமிழ்.**





# மருந்தே உணவு?

## எங்கள் வாழ்வும் வளமும்



- தமிழ்க்கவி -

“நிலை தளர்ந்திட்டபோது நீள் நிலத்துறவுமில்லை

சலமிருந்து அகன்றுபோனால் தாமரைக்கு அருக்கன் கூற்றம்.

பலவனம் எரியும்போது பற்று தீக்கு உறவாம் காற்று

மெலிவது விளக்கேயாகில் மீண்டும் அக்காற்றே கூற்றம்”

ஏதோ தத்துவம் போல தெரிந்தாலும், நாம் வாழும் வாழ்க்கைக்கு ஏற்ற பாடமே இது. நாம் வாழுங்காலத்தில் பொருள் எமக்கு மிக முக்கியமானது என்பதை சுட்டுகிறது. அதை வள்ளுவரும் சொன்னார். பொருளில்லார்க்கு இவ்வுலகம் இல்லை என்று. ஔவையும் சொன்னார். இல்லானை இல்லாளும் வேண்டாள் என்று. நாலடியாரும் சொன்னார். மேற்குறித்தவாறு இன்றைய அறிவுரைகளும் அதுதான்.

வாழ்க்கைப் பாடத்தில் பொருளில்லாதபோது நம்மை அசட்டை செய்தவர்கள் நாம் பொருளோடு வரும்போது உறவு பாராட்டுவார்கள். என் தாய் அடிக்கடி சொல்வார். “கெட்டாருக்கு உற்றார் கிளையிலுமில்லை வாழ்ந்தாருக்குற்றார் வழியிலுமுண்டு” என்று. இதையெல்லாம் படிப்பினையாகக் கொண்டு நான் உழைத்தாலும் என்னால் என் தாயார் எதிர் பார்த்த அளவுக்கு வெற்றிபெற முடியவில்லை. ஆனாலும் என் உழைப்பால் பட்டினி இல்லாமலும் சாதாரண துணிமணிகளை யாவது உடுத்தவும் சிறிதளவாவது கேளிக்கைகளில் ஈடுபடவும் முடிந்தது. சில வேளைகளில் கடன்படவும் அந்தக்கடனால் அவமானப்படவும் நேர்ந்தது.

அதெல்லாம் ஒரு தவிர்க்க முடியாத நிகழ்ச்சிகளாக கடந்து போனாலும் நான் என்ன தவறிழைத்தேன். அல்லது என்ன முயற்சிகளை கைவிட்டேன் என்பதை இப்போது என்னால் சரிவர உணர முடிகிறது.

ஏதோ சொல்வார்களே காலம் போகப் போக நமக்கு புரியும் உண்மைகளை எமக்கு மூத்தவர்கள் சொல்லித்தான் இருப்பார்கள். அப்போது நாம் அவர்களை ஊதாசீனப்படுத்தியிருப்போம். எம்எஸ் உதமூர்த்தியின் கருத்துகளைப் போல வாழ்க்கையில் முன்னேறுவதற்கான கருத்துகள் இருந்தன. எனினும் அவை மிகைப்படுத்தப்பட்டவைதான். வீட்டில் பணம் கொட்டோ கொட்டென்று கொட்டவேண்டுமா? இதைச் செய்யுங்கள் என்றொரு யூரியூப் நிகழ்ச்சி.. ஓர் இளைஞன் குந்தியிருந்து ரசித்துக் கொண்டிருந்தான். “என்னப்பா அவர் சொல்வது சரியா?” என்று கேட்டேன். அப்படிதான் தெரிகிறது.

“அதன் செலவும் குறைவு. நான் ஒன்றை வாங்கலாமென்றிருக்கிறேன்.” என்றான். “அவ்வளவு வருமென்றால் அவன் ஏன்ரா யூரியூப்பில வினைக்கெடுறான்” என்றேன். அவன் வெட்கப்பட்டான். “இது தெரியாமப் போச்சே” என்றொரு அலைவரிசை ஆரம்பிக்கும். உள்ளே ஒன்றும் இருக்காது. சில சொற்பொழிவாளர்கள் அருமையாக பேசுவார்கள் எல்லா அலைவரிசையிலும் வரும். பார்த்தால் அரைத்தமாவையே விதவிதமாக அரைப்பார்கள். அது ஒரு



பிழைப்பு.

சுயபொருளாதாரக்கொள்கை ஒவ்வொரு வீட்டுக்கும் நாட்டுக்கும் மிக அவசியம். இதைத்தான் எம் முன்னோர்கள் எமக்கு கற்பித்தார்கள். எங்கள் வீட்டின் வேலியில் முருங்கை காய்க்கும். மரவள்ளி தோட்டத்தில் இருக்கும். நெல் பட்டறையில் இருக்கும். அதைத்தான் நாங்கள் சாப்பிட்டாக வேண்டும். மா, பலா, வாழை, கொய்யா, நாவல், விளா, இப்படி எமது சூழலில் இருக்கும் பழங்களையே நாம் சுவைத்தோம்.

இதெல்லாம் எனது தந்தை விளைந்த வெங்காயத்தை ரயிலில் போட்டு கொழும்புச் சந்தைக்கு கொண்டு போகும்வரைதான். அப்பா கொழும்புக்கு வெங்காயம் கொண்டு போனால் அதை லாபமாக விற்பார். வரும் போது அப்பிள், பேரீச்சைப்பழம், மங்குஸ்தான் என புதுவகைப்பழங்களை வாங்கி வருவார். நாங்கள் அவற்றை பெருமையாக சுவைப்போம். அதேபோல எமது பலகார வகைகளுக்குள் ரவாலட்டும் மைசூர்பாகும், கேக்கும் உள்நுழைந்ததுமன்றி, அவை எமது சுய பொருளாதார மையங்களையே ஆட்டி அசைத்துப் பிடுங்கிப் போட்டுவிட்டன.

ஒருநாள் நமது தேசத்தை நோக்கி கப்பல்கள் வராமற்போகலாம். விமானங்கள் எமது தரையில் இறங்காமல் போகலாம். பார ஊர்திகள் வேறு வழி செல்லலாம். எது எப்படிப்போனாலும் உனது அடுப்பு புகையவேண்டும். அடடா அடுப்புகளில் இப்போது புகை இல்லையல்லவா, அவையும் எமது உழைப்பை அள்ளிக் கொண்டு போகின்றன.

வருடாவருடம் எனது வேலியில் கழிக்கும் தடிகளே வருடம் முழுவதுக்குமான எனது எரிபொருள். இப்போது பெரும்பாலான வீடுகளில் இது இல்லை. யாழ்ப்பாணத்தில் மரத்தூசு உமி என அடுப்புகளை நிரப்பிய எரிபொருளை இப்போது சீண்டுவார் இல்லையாம். காஸ் திடீரென நின்ற போது என்ன அவலப்பட்டோம்.

ஒவ்வொரு மாதமும் வீட்டில் செலவிடும் பணத்தை எழுதி வைத்தேன். மாத முடிவில் ஒரு லட்சத்து முப்பத்தெட்டாயிரம் ஆகியிருந்தது. இவ்வளவுக்கும் நான் தனிநபர். திக்கென்றிருந்தது. அடுத்தமாதம் பதினேளாயிரம் மீதப்படுத்தினேன். மூன்றாம் மாதம் மேலும் இருபதாயிரம் மீதமாயிற்று. எப்படி ஒன்றும் அதிசயமல்ல. விசயம் அதுதான் கடைத்தெருவுக்கு புறப்படு முன் செலவை பட்டியலிடுவேன். பின்னர் அதில் முக்கிய தேவகள் எது அவசியமற்றது எது என கணித்து அதை வெட்டிவிடுவேன். பின்னர் நான் எழுதிய பட்டியலுக்கு தேவையான பணத்த மட்டும் எடுத்துச் செல்வேன். அவ்வளவுதான் கடையில் புதிதாக காணும் அல்லது நான் ஆசப்படும் எதையும் வாங்க கையிலுள்ள பணம் இடங்கொடாது. கடன் வாங்கும் பழக்கமே எனக்கிராது. எனவே எனது சேமிப்பு உயர்ந்தது.

எம்மிடம் இப்போது வரவில்லாமல் செலவு செய்வோரே அதிகம். எனவே அவர்களுக்கு சேமிப்பும் அவசியமாக தெரியாது. நாளாந்தம் செலவுக் கணக்கெழுதும் பழக்கமும் அவர்களுக்கிராது. ஆனால் செல்வம் என்ற பெயரிலேயே செல்வோம் என மாறக்கூடியது என்பார்கள்.

அன்றாடம் நாம் உண்ணும் உணவே நமக்கு மருந்து என்கிற கருத்து வேகமாகப்பரவி வருகிறது. இப்போது கண்கெட்ட பிறகு சூரிய நமஸ்காரம் போல மருந்துகளைத் தேடி ஓடுகிறோம். எம்மிடையே ஊடுருவி இருக்கும் அந்நிய கலாசாரங்களில் உணவுக் கலாசாரமே மிக மோசமான விளவு தரும் கிருமியாகும். நவீன மாதிரி வியாபாரத் தலங்களில் அழகிய பக்கெற்றுகளில் அடைத்துள்ள பொருட்கள் அதன் பெறுமதி என்பவற்றை கவனியுங்கள். செத்தல்மிளகாய் பொடி செய்ய எல்லோராலும் முடியும். ஆனால் அந்தப்பொடி மிளகாயின் பெறுமதியில் மும்மடங்கு அதிகம். இது ஓர் உதாரணம் மட்டும்தான். இப்படி எமது சோம்பலுக்கும் சேர்த்து நாங்கள் செலவிடுகிறோம்

**உணவே மருந்தாக இருந்த காலம் ஒன்றிருந்தது. இப்போது மருந்தே உணவாக மாறியிருக்கிறது. ஒவ்வொருவரும் ஒவ்வொரு நேர உணவு உண்ண அமரும் போதும், அதற்கான உழப்பைச் செய்துவிட்டேனா என்று சிந்தித்தால் நாடு நலம்பெறும் நாமும் நலம் பெறுவோம். நோயற்ற வாழ்வு சித்திக்கும்.**

சிலர் செலவு செய்வதையே பெருமையாக பேசுவார்கள். முன்னரே சொன்னேன். பெரு நெருப்புக் காற்று உறவுதான். ஆனால் சிறு விளக்கிற்கு அதுவே கூற்றம் அதாவது யமன். சூரியன்தான் தாமரை மலர காரணம். அதுவே நீர் வற்றிப்போனால் தாமரைவாடிவிடவும் காரணமாகிறது. பணம் வசதி என்பனவும் அப்படித்தான். பணம் இருக்கிறதே என்று சமையல் கூட செய்யாமல் உணவு விடுதிகளில் ஒன்லைனில் சாப்பாடு எடுப்பார்கள். அந்த உணவுடனேயே நோயும் வருகிறது என்பது அவர்கள் அறியாதது. சாப்பட்டில் ருசி கூட்ட அதில் என்னென்ன கலக்கிறார்கள் என்பது இப்போது ரகசியமல்ல.

உணவே மருந்தாக இருந்த காலம் ஒன்றிருந்தது. இப்போது மருந்தே உணவாக மாறியிருக்கிறது. ஒவ்வொருவரும் ஒவ்வொரு நேர உணவு உண்ண அமரும் போதும், அதற்கான உழைப்பைச் செய்து விட்டேனா என்று சிந்தித்தால் நாடு நலம் பெறும் நாமும் நலம் பெறுவோம். நோயற்ற வாழ்வு சித்திக்கும்.

# சிறகவரைப் பயிர்ச் செய்கையும் அதனால் கிடைக்கும் பயன்களும்

**க.தனுஷன்**
**பயிராக்கவியல்**
**விவசாய பீடம்**



அவரையின் பாரம்பரிய ரகங்கள் பலவாகும். இப்பொழுது பயன்பாட்டிலுள்ள அவரை ரகங்கள் பெரும்பாலும் கலப்பினங்களே. வெள்ளை அவரை, சிறகவரை, மூக்குத்தி அவரை, சிகப்பவரை, கோழி அவரை, பட்டை அவரை, தம்பட்டை அவரை, மூக்குத்தி அவரை என அவரையில் கிட்டதட்ட 40 ரகங்கள் இருந்ததாக இயற்கை ஆர்வலர்களும், விவசாய ஆராய்ச்சியாளர்களும் குறிப்பிடுகிறார்கள். இன்றைய பதிவில் அதிக ஊட்டசத்துக்களை கொண்ட சிறகவரையைப்பற்றி அறிந்து கொள்ளலாம்.

பார்ப்பதற்கு பறவையின் சிறகு போல /அவரையின் ஓரங்கள் இருப்பதனால், சிறகு அவரை என்று பெயர் வந்தது. சிறகவரையில் பச்சை, ஊதா, சிவப்பு நிறங்கள் உள்ளன. அவரை வகைகளில் தாவரப்புரதம் தரும் காய்கறிகளில் சிறகவரை சிறப்பானதொன்று. இது பெபேசிய குடும்பத்தைச் சார்ந்தது. அவரை, பயறுக்குடும்பத்தைச் சார்ந்ததால் தனக்குத் தேவையான சத்துக்களை வேரில் வாழும் பாக்டீரியாவின் (Bacteria) துணையுடன் தயாரித்துக் கொள்ளும்.

நோயெதிர்ப்புசக்தி அதிகம். ஒருமுறை விதை ஊன்றினால் போதும், மறு ஆண்டு ஊன்றத்தேவையில்லை. விதைத்த 90 ஆம் நாளில் ஊதா நிறப்பூக்கள் தோன்ற ஆரம்பிக்கும். மகரந்தச் சேர்க்கை நடைபெற்ற இரண்டாம் வாரத்தில் 15லிருந்து 22 செ.மீ. நீளமுடைய, மிருதுவான நல்ல காய்கள் கிடைக்கும்.

அதிக ஊட்டசத்துக்கள் கொண்டது. தாவரத்தின் அனைத்துப்பகுதிகளுமே உண்ணக்கூடியது, மேலும் மருத்துவ பயன்பாட்டிலும் இடம்பெறுகிறது. கீரை போன்று இலைகளை சமைக்கலாம். பூக்களை சாலட்களில் பயன்படுத்தலாம். இவற்றின் இலைகள், வேர்க் கிழங்குகளைக் கூட சோயாபீன்ஸ் (Soya beans) போன்று உணவாகப்பயன்படுத்தலாம். அதிக அளவு (35 லிருந்து 40 சதவீதம் ) புரோட்டீனும், சுண்ணாம்புச்சத்து, இரும்புச்சத்து, போலிக் கமிலங்களும் (Polic Acid) உள்ளன.

சுதேச தெரிவு சிறகவரை பெரும்போகத்தில் ஒளி உணர்திறனால் காய் உற்பத்தி செய்யும். புதிய வர்க்கங்கள் வருடம் முழுவதும் விளைச்சல் தருவதற்காக விருத்தி செய்யப்பட்டுள்ளன.

வெளியிடப்பட்டுள்ள வர்க்கங்களின் தகவல்கள்.

SLS 44 - வருடம் முழுவதும் விளைச்சல் உற்பத்தியாகும். வெள்ளை நிறப்பூக்கள். காய்கள் பச்சை நிறமானவை, 15 கிராம் எடையுள்ள காய்கள் விதைகள் பழுப்பு நிறமானவை.

கிருஷ்னா - வருடம் முழுவதும் உயர் விளைச்சலைத்தரும். விதைகள் கடும் ஊதா நிறமாகவும் பூக்கள் மற்றும் காய்கள் ஊதா நிறமாகவுமிருக்கும். காய்கள் 7 செ.மீ நீளமானவை மற்றும் நடுகை செய்து 70 நாட்களின் பின் முதல் விளைச்சல் பெறலாம்.

**காலநிலை தேவை/ செய்கைக்கு பொருத்தமான பிரதேசங்கள்.**

சிறந்த செயல்திறனுக்கு 18-320C வெப்பநிலை. கடல் மட்டத்தில் இருந்து 2000 மீற்றருக்கு மேல் உள்ள எந்த இடத்திலும் வளர்க்கலாம்.

**மண்.**

நல்ல நீர் வடிந்தோடக்கூடிய சேதன பொருளுடனான மணல் இருவாட்டி அல்லது களி இருவாட்டி மண் சிறந்தது. ஆனால் களி மண்ணை விட மணல் மண்ணில் சிறப்பாக வளரும். சிறகவரை எல்லாவித மண்களிலும் நன்றாக வளரக் கூடியது.

சிறகவரை கொடிவகையைச்சார்ந்தது என்பதனால் மண்கலவையில் கவனமாக இருக்கவேண்டும். இதனுடைய வேர்களில் கிழங்குகள் வருவதால் மாடித்தோட்டத்தில் வளர்ப்புப்பைகளை தேர்வு செய்யும் பொழுது குறைந்தபட்சம் இரண்டு அடி ஆழம், இரண்டு அடி அகலம் இருக்கும்படி பார்த்துக் கொள்வது நல்லது.

சிறகவரை விதைத்து, ஐந்திலிருந்து ஏழு நாட்களுக்குள் முளைக்க ஆரம்பித்து விடும். ஆரம்பத்தில் மெதுவாகத்தான் வளர ஆரம்பிக்கும். போகப்போக நன்கு கொடிகள் படர்ந்து பூக்கள் வைத்து, காய்கள் வர, ஆரம்பிக்கும். பூக்கள் ஊதா நிறங்களில் அவரை பூக்களைப்போலவே இருக்



கும். ஒரு கொடியில் குறைந்தது இரண்டு கிலோ காய்களையாவது அறுவடை செய்து விடலாம். அதிகபட்சம் ஒரே கொடியில் ஐந்துகிலோ வரை காய்கள் காய்க்கும். சிறகவரைக்கு நல்ல பந்தல் அமைப்பது சிறந்தது. மாடித்தோட்டத்தில் பந்தல் அமைத்து பயிரிட்டு வளர்க்கலாம். நிலத்தில் பயிர் வைக்கும் போது கொட்டார பந்தல் அல்லது தட்டார பந்தல் அல்லது மரத்தின் மேல் ஏற்றிவிட்டு வளர்த்தும் கூட நல்ல அறுவடையை எடுக்கலாம்.

விதைத் தேவை - 21-23 kg /ha.

நாற்றுமேடை முகாமைத்துவம்.

நேரடி விதைப்பு.

மழைகாலத்தொடக்கத்துடன் விதையிடலாம் அல்லது நீர்ப்பாசன வசதி இருக்கும் பட்சத்தில் நடுகை செய்யலாம்.

நிலத்தைத்தயார் செய்தல்.

மண்ணை ஆழமாக உழுது மண்ணை உடைக்கவும். நீர் மண்ணில் தேங்குமானால். உயர் பாத்தி அல்லது வரம்புகளைத்தயார் செய்து விதையிடலாம். வழங்கப்பட்ட பரிந்துரைகளுக்கமைய குழிகளைக்குறிக்க வேண்டும்.

நடுகை செய்தல்.

சிறந்த முளைதிறனுக்கு நடுகை செய்ய 24 மணிநேரத்திற்கு முன்னர் விதைகளை நீரில் ஊறவிட வேண்டும். "கெப்டன்" போன்ற பங்கசு நாசினிகளை இட்டு வித்து சிகிச்சை வழங்குவது சிறந்தது. ஒரு குழிக்கு 3-4 விதையிட வேண்டும்.

நாற்று முளைத்து 2 வாரங்களின் பின், 2 ஆரோக்கியமான தாவரத்தை விட்டு ஏனையவற்றை அகற்றுதல்.

பயிற்சியளித்தல்.

குழிக்கு அருகில் 7 அடி கம்புகளை நடுவதால் கொடிகளுக்கு ஆதாரம் வழங்கலாம்.

கொடிகளை கம்பங்களுக்கு பழக்கப்படுத்தல்.

நடுகை இடைவெளி - வரிகள் மற்றும் தாவரங்களுக்கு இடையே முறையே 75cm x 60cm.

### பூச்சிகள் மேலாண்மை

சிறகவரையில் பூச்சித்தொல்லை பெரிதும் இருக்காது. பூச்சிகள் வந்தாலும் வாராவிட்டாலும் வாரமொருமுறை வேப்ப எண்ணெயைத் தெளித்து வந்தால் பூச்சிகள் தொல்லையிலிருந்து விடுபடலாம். அடுப்புச் சாம்பலை எடுத்து பணி ஈரத்தில் கொடிகளின் இலைகள் மேலே தூவி விட்டால் அசுவினி பூச்சி மாவுப்பூச்சிகளின் தொல்லை குறையும். மற்றபடி பனிக்காலங்களில் புழுக்களின் தொல்லை கொஞ்சம் அதிகமாக இருக்கும். இனக்கவர்ச்சிப் பொறி, அல்லது விளக்குப் பொறி வைத்து தாய்ப்பூச்சிகளை கவர்ந்திழுத்து புழுக்களின் தொல்லையைக்குறைக்கலாம்.

### பசளையிடல்.

சிறகவரைக்கு உரங்கள் என்று பெரிதும் கொடுக்கும்படி எதுவும் தேவைப்படாது. ஏனெனில் தனக்கு தேவையான ஊட்டசத்துக்களை வேரில் வாழும் பாக்டிரியாக்களின் உதவியுடன் தானே தயாரித்துக்கொள்ளும். மண் கலவையிலேயே சரியான முறையில் உரங்களை கொடுத்து விட்டாலே போதும். மற்றப்படி காய்கறிகள் வரும் போது காய்கறிகள் கருகிப்போவதற்கான வாய்ப்புகளுண்டு. போரன் சத்துக்குறைபாடு இருந்தால் இதுபோல ஏற்படும். எருக்கமிலைகளை எடுத்து நன்றாக அரைத்து அதை தண்ணீரில் கலந்து பூ பூக்கும் தருணத்தில் வேர்ப்பகுதியில் ஊற்றி விடலாம். இலைகள் மேலும் தெளித்து விடலாம். இப்படி தெளித்துக் கொண்டு வந்தால் காய்கள் வரும்போது காய்ந்து போகாமல் நன்கு திரட்சியான காய்கறிகள் கிடைக்கும்.

10t/ha நல்ல உக்கிய சேதனப்பொருட்களை சேர்த்தல். பரிந்துரைக்கப்பட்ட இரசாயன பசளையை மேலதிகமாக சேர்த்தல். நடுகை செய்ய 2-3 நாட்களுக்கு முன்னர் அடிக்கட்டு பசளையிடல்.

பசளை இட வேண்டிய காலம்.

அடிக்கட்டு பசளை (நடுகை செய்ய 2 நாட்களுக்கு முன்)

1ம் மேற்கட்டு பசளை (நடுகை செய்து 4 நாட்களின் பின்)

### நீர் வழங்கல்.

உலர்கால நிலையில் கிழமைக்கு ஒரு தடவை பயிருக்கு நீர் வழங்கல். மணல் மண்ணுக்கு குறைந்த வீதத்தில் நீர் வழங்கல். வேர்ப்பகுதியில் தண்ணீர் தேங்காதவாறு பார்த்துக் கொள்வது நல்லது.

### களைக் கட்டுப்பாடு.

ஆரம்ப கட்டத்தில் பயிர் மெதுவாகவே வளரும், ஆகையால் களைக்கட்டுப்பாட்டில் சிறந்த கவனம் செலுத்த வேண்டும். களைக்கட்டுப்பாடு விதை முளைத்து 1,3,5,7 மற்றும் 12ம் வாரங்களில் பரிந்துரைக்கப்படுகிறது.

### அறுவடை.

ஒவ்வொரு 3-4 நாட்களில் காய்களை அறுவடை செய்தல். பரிந்துரைக்கப்பட்ட வர்க்கங்களில் 70-75 நாட்களில் முதல் அறுவடை பெறலாம். ஆனால் அதிகமாக சுதேச வர்க்கங்கள் பயிர் செய்யப்படுவதால் 90-100 நாட்களின் பின் அறுவடை பெறலாம். முதல் அறுவடை பெற்று 6-7 வாரங்களின் பின் மறு அறுவடை பெறலாம்.

### விளைச்சல்.

SLS -44: 15-20 t/ha.

கிருஷ்ணா: 27t/ha.

சிறகு அவரையில் உள்ள ஊட்டசத்துக்கள்

உடலுக்குத்தேவையான அனைத்து ஊட்டசத்துக்களையும் சரியான அளவில் கொண்டது . வைட்டமின் யு, வைட்டமின் C, கால்சியம், மற்றும் இரும்புச்சத்துக் கொண்டது. மற்றைய கொடி காய்கறிகளை விட, 20% அதிக புரதம் கொண்ட காய்கறி இதுவாகும். இலைகள் மற்றும் பூக்களில் 15% புரதம் உள்ளது. விதைகளில் 35% புரதமும் 18% கொழுப்பு சத்தும் உள்ளது. கருவுறும் தாய்மார்களுக்கு தேவையான போலிக்கமிலம் சிறகவரையில் அதிகமுள்ளது.

அதனால் கர்ப்பிணி பெண்களுக்கு ஏற்ற சிறந்த காய்கறியாகும். புரோட்டின் சத்து குறைபாடுள்ள ஏழை எளிய மக்களுக்கு, சிறகவரை சிறந்த வரப்பிரசாதமாகும். சிறகவரையின் இலைகளை கால்நடைகளுக்குத் தீவனமாகக்கொடுக்கலாம். பலபயன் மிக்க தாவர வகைகளில் ஒன்றான சிறகவரையை தென்னை மரங்களில் ஏற்றி வளர்ப்பதால் சிறந்த பசுமை மூடாக்காகவும், மூடுபயிராகவும் உள்ளது. இதனால் தென்னையில் (Coconut) தோன்றும் வாடல், சாறுவடிதல் போன்ற நோய்களைத் தவிர்க்கலாம்.

மேலும் மருத்துவ பயன்பாட்டிலும் இடம்பெறுகிறது. கீரை போன்று இலைகளை சமைக்கலாம். பூக்களை சாலட்களில் பயன்படுத்தலாம். கொட்டைகளை பச்சையாகவோ, அல்லது சமைத்தோ உண்ணலாம். சோயாபீன் பயன்படுத்துவதை போல உணவுகளில் பயன்படுத்தலாம்.

**கருவுறும் தாய்மார்களுக்கு தேவையான போலிக்கமிலம் சிறகவரையில் அதிகமுள்ளது. அதனால் கர்ப்பிணி பெண்களுக்கு ஏற்ற சிறந்த காய்கறியாகும். புரோட்டின் சத்து குறைபாடுள்ள ஏழை எளிய மக்களுக்கு, சிறகவரை சிறந்த வரப்பிரசாதமாகும். சிறகவரையின் இலைகளை கால்நடைகளுக்குத் தீவனமாகக் கொடுக்கலாம்.**



# தக்காளிப் பயிர்ச் செய்கையினை வெற்றிகரமாக முன்னெடுப்பதற்கு

ஆனந்தன் பிரேம்நாந்
லக்சி பண்ணை



தக்காளி என்பது பழங்களில் ஒன்றாகும். (ஆனால் நாங்கள் இதை ஒரு காய்கறியாகவே கருதுகின்றோம்) அத்தோடு தக்காளியின் தாயகம் மெக்சிகோ என்று கூறப்படுகின்றது.

உலகில் அதிக அளவில் உற்பத்தியாகும் காய்கறிகளில் தக்காளியும் ஒன்று. ஆம் தற்பொழுது ஐரோப்பா மற்றும் ஆசிய நாடுகள் மாத்திரமன்றி மத்திய கிழக்கு நாடுகளிலும் பரவலாக உற்பத்தி செய்யப்படுகின்றது.

தக்காளியில் இந்தியா மற்றும் இலங்கையில் உற்பத்தி செய்யப்படும் ரகங்கள் பின்வருமாறு. கோ.1 கோ.2 மருதம் (கோ 3) பிகேஎம் 1 பூசாரூபி, பையூர் 1 சிஔல் சிஆர்எச் 3 அர்கா அப்ஜித் அர்கா அஃஹா அர்கா அனான்யா அர்கா அலோக் அர்கா சிரஸ்டா அர்கா வர்தன் அர்கா விசால் அர்கா விகாஸ் அர்கா செவ்ரோப் அர்கா மெகாலி அர்கா அஹ்தி என்று பல ரகங்கள் உள்ளது இதில் நாட்டு ரகங்களை நாங்கள் தேர்ந்தெடுப்பது சிறப்பாக இருக்கும்.

காரணம் நோய் எதிர்ப்பு சக்தி உடையதாக இருக்கும். பராமரிப்புத் தேவை அதிகம் ஏற்படாது ஒரு சில பண்ணையாளர்கள் தக்காளியை ஆண்டு முழுவதும் பயிரிட்டாலும் தக்காளியானது ஜுன் - ஜுலை, நவம்பர் – டிசம்பர், பிப்ரவரி – மார்ச், மாதங்கள் தக்காளி பயிரிடுவதற்கு ஏற்ற பருவங்கள் ஆகும். வண்டல் மண் மற்றும் செம் மண்ணில் நல்ல விளைச்சல் தரும்.

மாறாக உவர் மண் மணல் சார்ந்த மண்ணில் பயிரிடக் கூடாது விளைச்சல் முற்றாகத் தடைப்படும். மண்ணின் கார அமில தன்மை 6- 7 ஆக இருக்க வேண்டும். தக்காளியானது 15 டிகிரி செல்சியஸ் இற்கும் குறைவான வெப்பநிலை காணப்படுமாயின் விளைச்சல் பாதிக்கப்படும். 35 டிகிரி செல்சியஸ் இற்கு அதிகமான வெப்பநிலை இருந்தாலும் இதன் வளர்ச்சி மற்றும் உற்பத்தி பாதிக்கப்படும்.

ஒரு ஏக்கரில் பயிரிட 175 கிராம் அளவுள்ள விதை போதுமானது. தேவையான அளவு தொழுவுரம் இட்டு 1.5 × 3 மீட்டர் நீளமுடைய நாற்றங்காலை தயார் செய்து அதில் தக்காளி விதைகளை தூவி நீர் பாய்ச்ச வேண்டும். 30 நாட்களில் நாற்றுகள் வளர்ந்துவிடும்.

நாற்றுக்களை நடுவதற்கு முன்பு நிலத்தில் 2 டன் மக்கிய உரம் அல்லது தொழு உரம் இட்டு நன்கு உழுது பாத்திகளை உருவாக்க வேண்டும். 60 செ.மீ இடைவெளியில் நீளமான பாத்திகள் அமைத்து 45 செ.மீ இடைவெளியில் செடிகளை நட வேண்டும். செடிகளை நடும் போது செடிகளுக்கு இடையில் கிளிசரியா கொத்துகளை குத்தி விடுவது சிறந்ததாக இருக்கும் காரணம் சிறிய செடிகளுக்கு வெயில் தாக்கம் இருக்காது. அத்தோடு கிளிசரியா இலைகள் உதிர்ந்து செடிகளின் அடிப்பகுதியில் விழுந்து மக்கும்போது செடிக்கு தேவையான நைட்ரஜன் கிடைக்கும்.

ஏக்கருக்கு 14,000 செடிகள் வரை நாட்ட முடியும். பயிரை நட்டு உயிர் நீர் பாய்ச்ச வேண்டும். அதன்பின்பு மண்ணின் ஈரத்தன்மையை பார்த்து தண்ணீர் பாய்ச்ச வேண்டும். நாற்று நட்ட ஒரு மாதத்திற்கு பின்பு அதில் வளர்ந்துள்ள தேவையற்ற களைகளை நீக்கி வேர்களுக்கு தொழு

உரம் இடவேண்டும் இதனால் நல்ல வளர்ச்சியும் நல்ல விளைச்சலும் பெறலாம்.

பூ பிடிக்க ஆரம்பிக்கும் போது இயற்கையாக உருவாக்கப்பட்ட தேமோ கரைசலை பயன்படுத்தினால் பூ உதிர்வது கட்டுப்படுத்தப்பட்டு அதிக அளவில் காய்கள் பிடிக்கும். காய்கள் முற்ற ஆரம்பிக்கும்போது செலவில்லாமல் இயற்கையாக உருவாக்கக் கூடிய கிருமிநாசினியான பஞ்சகாவியா,மற்றும் கற்பூர கரைசலையும் பயன்படுத்தலாம்.

பச்சைக் காய் துளைப்பான் போன்ற புழுக்கள் இதற்கு நிச்சயம் கட்டுப்படும் பூச்சிகளின் தாக்கம் அதிகமாக இருந்தால் இயற்கை கிருமி நாசினியான அக்கினி அஸ்திராவை பயன்படுத்தலாம். முற்று முழுதாக இயற்கையாக பயிரிடுவதால் அதிக லாபம் பெறலாம். அறுவடைக்கு தயாரான காய்களை மட்டும் பறிக்க வேண்டும், காய்கள் கரும்பச்சை நிறத்தில் இருந்து வெளிர் மஞ்சள் நிறத்திற்கு மாறும் பொழுது அதனை அறுவடை செய்ய வேண்டும்.

நீர்ப் பற்றாக்குறை இல்லாமல். விவசாயியின் உழைப்பு மட்டும் இருந்தால் போதும். ரசாயன உரத்திற்காக ஒரு ரூபாய் கூட செலவு செய்யத் தேவையில்லை 135 நாட்களில் ஓர் ஏக்கருக்கு 15 டன் தக்காளி அறுவடை செய்யலாம். தக்காளி இல்லாத சமையல் இல்லை என்றுதான் கூற வேண்டும்.

சமையலை பொறுத்தவரை அத்தியாவசியப் பொருளாக தக்காளி உள்ளது. ஆம் தக்காளியை பொறுத்தவரை சந்தை வாய்ப்பு அதிகமாகவே உள்ளது. எமது நாட்டில் மாத்திரமே நாங்கள் தக்காளியினை காய்கறி தேவைக்காக மட்டும் பயன்படுத்துகின்றோம். வெளிநாடுகளில் உற்பத்தியாளரிடம் இருந்து பெரும் நிறுவனங்கள் நேரடியாக கொள்முதல் செய்து வெவ்வேறு வகையான மாற்று உற்பத்திகளை செய்து சந்தைப்படுத்துகின்றார்கள்.

ஆனால் எங்கள் நாட்டில் இவ்வாறு இல்லை இதை ஒரு வேதனைக்குரிய விடயமாக கருதுகின்றோம் நாங்கள். குறிப்பு சிறிய அளவில் காய்கறிகளை உற் பத்தி செய்யும் விவசாயிகள் முதன்முதலாக தக்காளியினை உற்பத்தி செய்வதாக இருந்தால் எந்த சந்தர்ப்பத்திலும் ஓர் ஏக்கருக்கு மேல் பயிரிடக் கூடாது. மாறாக இரண்டு








அல்லது மூன்று தடவைக்கு மேல் தொடர்ச்சியாக தக்காளியை உற்பத்தி செய்யும் விவசாயிகள் ஓரிரு கொள்வனவாளர்களை மாத்திரம் நம்பாமல் ஐந்து அல்லது ஆறுக்கு மேற்பட்ட கொள்வனவாளர்களின் தொடர்பினை ஏற்படுத்திய பிற்பாடு உங்கள் உற்பத்தியின் அளவினை அதிகரிக்கலாம்.

தக்காளியை பொறுத்தவரை மிக விரைவில் பழுதடைய கூடிய ஒன்று ஆகையால் எந்த அளவில் சந்தை வாய்ப்பு உள்ளது என்பதனை நன்கு ஆராய்ந்து அதற்கு ஏற்றால் போல் உற்பத்தியின் அளவினை அதிகரிக்க வேண்டும். மாறாக ஒரே தடவையில் ஐந்தாறு ஏக்கரில் உற்பத்தி செய்ய விரும்ப வேண்டாம்.

**தக்காளியை பொறுத்தவரை மிக விரைவில் பழுதடைய கூடிய ஒன்று ஆகையால் எந்த அளவில் சந்தை வாய்ப்பு உள்ளது என்பதனை நன்கு ஆராய்ந்து அதற்கு ஏற்றால் போல் உற்பத்தியின் அளவினை அதிகரிக்க வேண்டும். மாறாக ஒரே தடவையில் ஐந்தாறு ஏக்கரில் உற்பத்தி செய்ய விரும்ப வேண்டாம்.**

# உற்பத்தி திறனை அதிகரிக்க அவசியமான நேர முகாமை

- அமந்தா இம்பர் -




“நேர மேலாண்மை என்பது நம்மில் பலரும் அக்கறையுடன் சிந்திக்கும் விஷயம் ஆனால், பலராலும் எளிதில் செய்ய முடியாத விஷயம். அதை மிகச் சரியாகச் செய்யும்போது உற்பத்தித் திறனை அதிகரிப்பதுடன், முன்னேற்றத்தை சுலபமாக அடைய முடியும்” என்று சொல்லி ஆரம்பிக்கிறது ‘டைம் வைஸ்’ (Time Wise) என்கிற புத்தகம். ஆஸ்திரேலியாவைச் சேர்ந்த அமந்தா இம்பர் எழுதிய இந்தப் புத்தகம், நேர மேலாண்மை மூலம் உற்பத்தித் திறனை எப்படி அதிகரிப்பது என்பதை எடுத்துச் சொல்கிறது.

“நேரத்தைப் பற்றி சுருக்கமாகச் சொல்ல வேண்டும் என்றால், அது பறக்கும் குணம் கொண்டது. அதை உங்களால் ஒருபோதும் நிறுத்த முடியாது. ஆனால், அதைப் பறக்க வைக்கும் பைலட் நீங்கள்தான்” என எடுத்த எடுப்பிலேயே புத்தகம் சொல்ல வரும் விஷயத்துடன் நம்மை இணைத்து விடுகிறார் புத்தகத்தின் ஆசிரியர்.

“நேர மேலாண்மை என்றதும், ‘முக்கியமான விஷயங்களை முதலில் செய்யுங்கள். சோஷியல் மீடியாவைப் பார்க்காதீர்கள்’ என அனைவரும் சொல்லும் அறிவுரைகளைத் தரும் புத்தகம் அல்ல இது. ‘நேரத்தை நம்மைப் போல் சாமான்யர்கள் எல்லாம் மேலாண்மை செய்வதெல்லாம் சாத்தியம் இல்லை’ என்று நீங்கள் நினைத்துக் கொண்டிருக்கலாம். ஆனால், நடைமுறையை நம்மால் கட்டுப்பாட்டில் வைத்திருக்க முடியும் என்பதை நீங்கள் ஒப்புக் கொள்வீர்கள்தானே? நேர மேலாண்மைக்கான நடைமுறையை நம்முடைய குறிக்கோளுக்கு ஏற்ப வடிவ மைத்துவிட்டால் அதுவே வெற்றிக்கான பயணத்தின் முதல் அடி எனலாம்.

### எல்லோருக்கும் 24 மணி நேரம்தான்

பொதுவாக, தொழில் உலகில் ஒரு முக்கியமான புள்ளியை மேற்கோள் காட்டி, நமக்கும் அவருக்கும் ஒரு நாளைக்கு 24 மணி நேரம் மட்டுமே இருக்கிறது. அவர் எப்படி சாதிக்கிறார், நாம் ஏன் சறுக்குகிறோம் என்று கேட்பது உலக நடைமுறை. அவருக்கு என்ன..? மெயில் செக் பண்ண ஒருத்தர், போனை டயல் செய்து தர ஒருத்தர், என்ன, எப்போது சாப்பிட வேண்டும் என்று சொல்ல ஒருத்தர் எனப் பல பேர் இருப் பார்கள். என் நிலைமை அப்படியா? அத்தனை வேலையையும் நானேயல்லவா செய்ய வேண்டும் என்று ஒரு சமாதானத்தை நாம் சொல்லிவிட்டு அதைக் கடந்து சென்றுவிடுவோம்.

2016-ல் செய்யப்பட்ட ஓர் ஆய்வின்படி, 488 மில்லியன் நபர்கள் வாரத்துக்கு சராசரியாக 55 மணி நேரம் உழைக்கின்றனர். இதிலென்ன ஆச்சர்யம் என்கிறீர்களா? வாரத்துக்கு சராசரியாக 55 மணி நேரத்துக்கும் மேல் உழைப்பவர்களுக்கு, சராசரியாக 35 முதல் 40 மணி நேரம் வரை உழைப்பவர்களை விட இதயம் சார்ந்த கோளாறுகள் வருவதற்கு 35% அதிக வாய்ப்புள்ளது என்று சொல்கிறது அந்த ஆய்வு. இணையம், டிஜிட்டல் மயமாதல் மற்றும் கோவிட் என்ற அனைத்தும் சேர்ந்து வேலை நேரத்தை அதிகப்படுத்திக்கொண்டே போகின்றன.

சாமான்யர்களுக்கே இந்த நிலை எனில், சாதித்தவர்களின் நிலையைக் கொஞ்சம் சிந்தித்துப் பாருங்கள். சாதித்தவர்களுக்கு தொடர்ந்து டிமாண்ட் இருந்து கொண்டே இருக்கிறது. அவர்களுடைய மெயில் பாக்ஸ்கள் நிரம்பி வழிகின்றன, காலண்டரும் டைரியும் எப்போதும் நிரம்பியே இருக்கின்றன. வேலை அவர்களை விழுங்கிவிடுகிறது என்று சொல்லும் அளவுக்குதான் அவர்களின் நிலைமை இருக்கும்.

### 150 பேரிடம் நேர்காணல்

இது பற்றித் தெரிந்துகொள்ள மூன்று ஆண்டுகள் எடுத்துக்கொண்டு, 150-க்கும் மேற் பட்ட சாதனையாளர்களைத் தேர்வு செய்து, அவர்களுடைய நேர மேலாண்மை குறித்து ‘How I Work’ என்கிற தலைப்பில் நேர்காணல் செய்து, அதிலிருந்து கிடைத்த தகவல்களையே இந்தப் புத்தகத்தில் உங்களுக்குத் தந்துள்ளேன்” என்று சொல்லும் ஆசிரியர், ஆய்வின் மூலம் கண்டறிந்த விஷயங்களை விளக்குகிறார்.

“150-க்கும் மேற்பட்ட வெற்றியாளர்களை நேர்காணல் செய்த பின் பின்வரும் இரண்டு விஷயங்களை என்னால் தெளிவாகப் புரிந்து கொள்ள முடிந்தது. அவற்றில் ஒரு முக்கியமான விஷயம், சாதனையாளர்கள் அவர்களுடைய பணியை அணுகும் கோணம் என்பது வேறு மாதிரியானதாக இருக்கிறது. மாணவனாக இருந்தாலும் சரி, ஒரு நிறுவனத்தின் சி.ஈ.ஓ-வாக இருந்தாலும் சரி, அவர்களுடைய பணியை அணுகும் கோணம்தான் அவர்களின் வெற்றிக்கு மிகவும் உதவுகிறது.

‘அட, அவர்கள் அப்படி என்னதான் செய்கிறார்கள்’ என்று சில உதாரணங்கள் சொல்லுங்களேன். கேட்போம் என்கிறீர்களா?

பின்ட்ரெஸ்ட் (Pinterest) நிறுவனத்தின் முன்னாள் தலைவர் தன்னுடைய மொபைல் போனை ஒரு நாளின் முதல் பாதி முழுக்க லாக்கரில் வைத்து பூட்டிவிடுகிறார். மற்றுமொரு சி.ஈ.ஓ-வோ, விடுமுறைக்குச் செல்லும் போது தன் மெயில் ஐடிக்கான பாஸ்வேர்டை மாற்றிவிடும்படி (புது பாஸ்வேர்டை என்னிடம் சொல்லாதீர்கள் என்கிற கண்டிஷனுடன்) தன்னுடைய உதவியாளரிடம் சொல்லிவிட்டுப் போகிறார். இப்படி பலரும் தங்கள் பணியின் தன்மைக்கு ஏற்ப அணுகு முறைகளைக் கொண்டுள்ளனர்” என்று சொல்லும் ஆசிரியர், பின்வரும் முக்கிய விஷயங்களையும் சுட்டிக் காட்டியுள்ளார்.

இந்த உலகில் எதற்கு முன்னுரிமை தருவது, எப்போது ‘yes’ சொல்வது, எப்

போது 'No' சொல்வது, நாள்கள், வாரங்கள், மாதங்கள், வருடங்கள் போன்றவற்றைத் திட்டமிட்டுக் கட்டமைத்துக்கொள்வது எப்படி, குறைந்தபட்ச நேரத்தில் செயலாற்றி காரியங்களை முடிப்பது எப்படி, டிஜிட்டல் கவனச் சிதறல்கள் ஏற்படாமல் பார்த்துக் கொள்வது எப்படி, எதிர்மறை எண்ணங்கள் வராமலும், நாம் இதற்குத் தகுதியானவர் தானா என்கிற எண்ணம் எழாமலும் பார்த்துக்கொள்வது எப்படி, தொழிலில் இருக்கும் பலருடன் நட்பு பாராட்டி நெட்வொர்க்கை உருவாக்குவது எப்படி, அதிக ஆற்றலுடன் இருப்பது எப்படி என்பனவற்றைத் தொகுத்துத் தந்துள்ள ஆசிரியர், வேலை நெருக்கடியை அணுகும் முறை குறித்து விளக்குகிறார்.

### அடுத்தடுத்து வரும் வேலைகள்

"காலையில் வேலையை ஆரம்பிக்கிறீர்கள். நாளை காலை உள்ள மீட்டிங்குக்கு பவர் பாயின்ட் ஸ்லைடுகளைத் தயார் செய்ய ஆரம்பிக்கும்போது, உங்களுடைய மேலதிகாரியிடமிருந்து போன் வருகிறது. மெதுவாக செய்யக் கூடிய காரியத்தை அவர் சொன்னாலும் அதே சமயம் 'அவசரம்' என்று சொல்லிவிட்டு, அவர் போனை வைக்கிறார்.

போனை வைத்தவுடன் ஏதாவது முக்கியமான அவசர மெயில் இருக்கிறதா என்று ஒரு பார்வை பார்த்துவிடுவோம் என்று மெயில் பாக்ஸ்க்குள் நுழைகிறீர்கள். மெயில் பாக்ஸில் பாதி மெயில் 'அவசரம்' என்கிற ரகத்தில் இருப்பது சகஜம். அந்த மெயில்களைப் பார்த்து உங்கள் கவனம் திரும்ப, திடீரென மேலதிகாரி சொன்ன வேலை நினைவுக்கு வருகிறது. அதை ஆரம்பிக்கலாம் என்று முனைகிறீர்கள். அப்போது ஒரு ஜூம் மீட்டிங்குக்கு உங்களை அழைக்கின்றனர். அப்புறம் வேறு அழைப்பு... வேறு வேலை என்று கடந்து மணியைப் பார்த்தால் மதியம் மூன்று. உங்களுடைய பவர்பாயின்ட் பிரசன்டேஷன் ஆரம்பித்த இடத்திலேயே நிற்கிறது.

இது நம்மில் பலருக்கும் இருக்கும் நிலை. ஏன் இந்த நிலை..? நாம் அனைவருமே நாம் நம்முடைய நேரத்தை எதிர்வினைகளில் மட்டுமே செலவிடுகிறோம். அந்த நாள் குறித்து நாம் போட்ட திட்டங்களைக் கிடப்பில் போட்டுவிட்டு, இந்த எதிர்வினை சக்கரத்திலேயே சுழன்று கொண்டிருக்கிறோம். எது முக்கியமோ, அதில் கவனம் செலுத்தினால் தானே நல்லது? வெறும் அலுவலக வேலை - பிரசன்டேஷன் எனில், பரவாயில்லை. கண்ணுக்குமுன் இருக்கும் விஷயங்களைச் செய்துகொண்டு, நாம் நம் கரியர் முன்னேற்றத்துக்கான விஷயங்களைக்கூட நீண்ட நாள் களுக்கு கண்டுகொள்ளாமல் விட்டு விடுகிறோமே?

### பிரச்னைக்கு என்னதான் தீர்வு?

இந்தப் பிரச்னையைக் கடந்து வர நீங்கள் ஒரு சிஸ்டத்தை டிசைன் செய்ய வேண்டும் என்கிறார்கள் சாதனையாளர்கள். பிரசன்டேஷன் தயார் செய்ய வேண்டுமா, மீட்டிங் திட்டமிடப்பட்ட நாளிலிருந்தே ஒரு நேரத்தை ஒதுக்குங்கள். இடையே ஒரு நாள் வேலை எந்த நிலையில் இருக்கிறது என்பதை சரிபார்த்துக் கொள்வதற்கான நாளையும் முடிவு செய்து வைத்துக் கொள்ளுங்கள். இப்படிச் செய்வதன் மூலம் மீட்டிங் தேதிக்கு அருகே வரும் போது தவிக்க வேண்டி இருக்காது. இவை யெல்லாம் சாத்தியமா... பத்து நாள் இருந்தாலும் ஒவ்வொரு நாளும் ஒரு வேலை என் தலையில் கட்டப்படுகிறதே என்பீர்கள். அது சரியல்ல. வெற்றியாளர்களாகத் திகழ நீங்களும் வேலையை மற்றவர்களிடம் தந்து பழக வேண்டும்.

கொடுக்கல்-வாங்கல் (Give and Take) என்கிற இரண்டிலும் நீங்கள் கைதேர்ந்த ஆளாக வாழப் பழக வேண்டும். வாங்குதலில் சிறந்தவர்களாகவும் கொடுப்பதில் திறமையற்றவர்களாகவும் இருந்தால் சாதனையாளராக மாற முடியாது. உங்களிடம் சொல்லப்படும் எல்லா வேலைகளையும் நீங்களே செய்ய நினைத்து, அதற்காகப் பாடுபட ஆரம்பித்தால், சீக்கிரத் திலேயே 'பர்ன்அவுட்' (Burnout) என்கிற நிலையை அடைந்து, ஒன்றும் செய்ய முடியாத வராக மாறிவிடுவீர்கள்.

### ஆர்வமான வேலையில் கவனம்

உங்களை நோக்கி வரும் வேலைகளில் எதை நீங்கள் ஆர்வத்துடன் செய்வீர்களோ, அதை மட்டும் எடுத்துக்கொள்ளுங்கள். உங்களுக்கு ஆர்வம் இல்லாத வேலைகளை ஆர்வத்துடன் செய்பவர்களிடம் தந்து செய்ய சொல்லுங்கள். நீங்கள் செய்ய வேண்டிய வேலைகள் (To-do list) பட்டியலை வைத்திருப்பதுபோல, செய்யவே கூடாத வேலைகள் (To-don't list) கொண்ட பட்டியல் ஒன்றைத் தயார் செய்து வைத்துக் கொள்ளுங்கள்.

பிடித்த வேலை, பிடிக்காத வேலை என்று எப்படிக் கண்டுபிடிப்பது என்கிறீர்களா? உங்களுடைய நோக்கத்துக்கு சற்றும் ஒவ்வாத நோக்கம் கொண்ட வாடிக்கையாளர்களுடன் நேரம் செலவிடுவது, உங்களால் மிகவும் சுலபமாகச் செய்ய முடியும் என்று நினைத்து ஒரு காரியத்தை எடுத்துக் கொள்வது, காலை 8.00 மணி முதல் 11.00 மணி வரை அலுவலக சந்திப்புக்களை திட்டமிடாமல் இருப்பது, அடுத்தவர்களுடைய நிகழ்ச்சிக்கு வளைந்து கொடுக்காமல் இருப்பது, ஒரு சிலரை கண்ணால்கூட பார்க் காமல் இருப்பது, இந்த உதவியைச் செய்யா விட்டால் எப்படி என்ற எண்ணத்தில் உதவி செய்வது போன்றவற்றைச் சொல்லலாம்.

இவற்றின் எண்ணிக்கை நபருக்கு நபர் மாறுபடும். குறிப்பாக, உங்கள் கரியர் லைஃப் புக்குத் தேவையில்லாத எல்லா விஷயங்களையும் பட்டியலிட்டு, அவற்றை இந்த லிஸ்ட்டில் சேர்த்துக்கொள்ளலாம்" என்று சொல்லும் ஆசிரியர், "உலகில் அனைவருக்கும் ஒரே அளவாகத் தரப்பட்டு இருக்கும் 24 மணி நேரத்தை எப்படி புத்திசாலித்தனமாக உபயோகித்துக்கொள்கிறோம் என்பதிலேயே நாம் சாதனையாளராக இருக்கப்போகிறோமா, இல்லையா என்பது முடிவு செய்யப்படுகிறது என்பதை மறந்துவிடாதீர்கள்" என்று கூறி முடிக்கிறார்.

நேர மேலாண்மை குறித்து ஏற்கெனவே சொல்லப்பட்டுள்ள சில கருத்துகள் இந்தப் புத்தகத்தில் சொல்லப்பட்டு இருந்தாலுமே, அவை, கூறப்பட்டுள்ள விதம் மற்றும் கோணம் போன்றவை மிகவும் சுவாரஸ்யமாக இருப்பதால், எளிதில் மறக்க முடியாதபடி உள்ளன. நேர மேலாண்மையில் முக்கியமான சவாலே, அதற்கான உத்திகளை மறவாமல் நினைவில் வைத்து செயல்படுவதுதான். இது குறித்து தெளிவான பாதையைக் காட்டும் இந்தப் புத்தகத்தை அனைவரும் படித்துப் பயன் பெறலாம்.

**'நேர மேலாண்மை என்றதும், 'முக்கியமான விஷயங்களை முதலில் செய்யுங்கள். சோஷியல் மீடியாவைப் பார்க்காதீர்கள்' என அனைவரும் சொல்லும் அறிவுரைகளைத் தரும் புத்தகம் அல்ல இது. 'நேரத்தை நம்மைப் போல் சாமான்யர்கள் எல்லாம் மேலாண்மை செய்வதெல்லாம் சாத் தியம் இல்லை' என்று நீங்கள் நினைத்துக் கொண்டிருக்கலாம்.**

# இசையும் உயர்வும்

வேதநாயகம் தபேந்திரன்



"பிள்ளை நல்லாப் படிக்கோணும். அஞ்சாம் ஆண்டு ஸ்கொலர்சிப் பாஸ் பண்ண வேணும். பிறகு ஓஎல், ஏஎல் சோதினையள் திறமாப் பாஸ் பண்ணிக் கம்பஸ் போகோணும்."

எமது நாட்டின் சாதாரண பிரஜைகளது அசாதாரணமான ஆசை இது.

பிழை என்றும் சொல்ல முடியாது. பரம்பரையாக மரபுவழி கடத்தப்பட்டு வந்த உணர்வின் வெளிப்பாடு.

அதாகப்பட்டது என்னவென்றால் கல்வியால் மட்டுமே முன்னேற முடியுமென்ற நம்பிக்கை.

அந்தச் சிறுமிக்கு மூன்று வயது. சரஸ்வதி கோயிலுக்கு அருகாமையில் வீடு. கோயிலுக்கு முன்பாக ஒரு முன்பள்ளி.

அங்கு அவளது பாடும் திறமையைக் காண்கிறார்கள். அறநெறிப் பாடசாலை ஆசிரியை அவளது திறமையைக் கண்டு ஊக்குவிக்கின்றார்.

குழந்தைச் சிறுமி அற்புதமாகப் பாடுகின்றாள். கல்வித்தாய் சரஸ்வதியின் ஆசீர்வாதம் போலும். இயற்கைத் தாய் தந்த அற்புதக் குரல் வளத்தை இசைக்குழு ஒன்றின் இயக்குநர் காண்கின்றார்.

தமது இசைநிகழ்ச்சிகளில் அறிமுகம் செய்கின்றார்.

சிறுமியின் தேமதுரக் குரலைக் கேட்ட இசை ரசிகர்கள் பரவசம் அடைகின்றனர். அந்தப் பிள்ளை வளர வளர அவளது இசைத் திறமையும் வளர்கிறது. குரல் வளமும் மெருகேறுகிறது.



அவளது தாய், தந்தையரும் மகளின் திறமைக்கு ஊக்கம் கொடுக்கின்றனர். பெண் பாடகிகளின் குரல்வளத்தை ஒவ்வொரு தொனியில் பாடுகின்றார். பாடல்களை எழுதிப் பாடாமல் மனனம் செய்து ராக தாளத்திற்கு ஏற்பப் பாடுகின்றார்.

இந்தச் சின்னப் பிள்ளை எப்படி அற்புதமாகப் பாடுகின்றாளென இசை ரசிகர்கள் வியந்தனர்.

பிள்ளையின் வயது ஏற ஏறப் பயிற்சி செய்யச் செய்யப் பாடும் திறமையும் கூடுகிறது. அதே வேளை கல்வியிலும் விளையாட்டு ஏனைய நிகழ்ச்சிகளிலும் திறமை காட்டுகிறாள்.

மூன்று வயதில் ஆரம்பித்த இசைப்பயணம் 14 வயதில் உச்சமடைகிறது. கலைகளின் விளைநிலமாம் இந்திய தமிழகத்தின் தனியார் தொலைக்காட்சி அலைவரிசை ஒன்றில் சாதனையாளராக முதல் பரிசைப் பெறுகின்றாள்.

தமிழ்கூறும் நல்லுலகம் முழுவதுமே அவளைக் கொண்டாடுகிறது. நாட்டின் தலைவர், அமைச்சர்கள், ஒலி ஒளி ஊடகங்கள், இந்தியத் தூதரகம், அரச உயர் அதிகாரிகள், மாவட்டங்கள் யாவுமே கொண்டாடுகின்றன.

அவள் தான் கில்மிசா உதயசீலன்.

கல்வியால் மட்டுமே உயரலாம் என்ற சிந்தனை ஊறிய சமூகத்தில் இசையால் சிகரம் தொட்ட சாதனைப் பெண் இவள்.

பரம்பரையாக ஒரே சிந்தனை வழி வந்த சமூகத்தில் மாற்றுச் சிந்தனைக்கு வழிகாட்டும் சாதனையாளர்கள் போற்றப்பட வேண்டும்.

ஆடல், பாடல், நடிப்பு, கணினி, சதுரங்கம், கைத்தொழில், சேவை, விவசாயம் எனப் பலதுறைகள் உண்டு. ஆர்வம் காட்டும் ஒருவரை அத்துறையில் முன்னேற வழிகாட்ட வேண்டும்.

**பரம்பரையாக ஒரே சிந்தனை வழி வந்த சமூகத்தில் மாற்றுச் சிந்தனைக்கு வழிகாட்டும் சாதனையாளர்கள் போற்றப்பட வேண்டும். ஆடல், பாடல், நடிப்பு, கணினி, சதுரங்கம், கைத்தொழில், சேவை, விவசாயம் எனப் பலதுறைகள் உண்டு. ஆர்வம் காட்டும் ஒருவரை அத்துறையில் முன்னேற வழிகாட்ட வேண்டும்.**

அதே வேளையில் கல்வியிலும் கட்டம் கட்டமாக உயர தேர்வுகளில் சித்தியடைய வழிகாட்ட வேண்டும்.

கல்வித் தேர்ச்சி இருந்தால் தான் சாதனை படைக்கும் சாதனையின் மதிப்பும் உயரும்.

கலைகள் கைகொடுக்காத காலத்தில் கல்வி சோறு போடும்.

தாயகத்தின் பொருளாதாரம் உயர்வதற்குப் பலதுறைகளில் சாதனை படைக்கும் திறமைசாலிகள் தேவை.

பலதுறைகளில் ஏற்படும் வளர்ச்சி ஊடாகவே வீடும் உயரும். நாடும் உயரும்.

ஊக்குவிக்க ஒருவன் இருந்தால் ஊக்கு விற்பவனும் தேக்கு விற்பான்.

அன்பார்ந்த பெற்றோரே,

உங்களது பிள்ளைகளின் இயல்பூக்கம் அறிந்து ஊக்குவியுங்கள். முன்னேற உதவுங்கள்.



# எங்கட ஆச்சி


- காரைக்கவி கந்தையா பத்மானந்தன் -

எங்கட ஆச்சியிட்டை ஒரு குணம் இருந்தது, என்னவெண்டால் அவ எங்கயும் சபை சந்திக்கு கோயில் குளத்துக்கு கடை கண்ணிக்கு போறது எண்டால் நேர காலத்தோட போடுவா .

வயலுக்குப் போறதெண்டாலும் எந்த விதமான மினக்கேடும் இல்லாமல் போடுவா. அத மாதிரி எங்களையும் இருக்க விட மாட்டா எங்கயும் போறதெண்டால் நேர காலத்தோடை துரத்தி விடுவா .

முக்கியாமாச் சோதினை நேரம் அரை மணித்தியாலம் முதலே பள்ளிக்கம் போகச் சொல்லிப்போடுவா. அப்பிடி நேரத்தோட போனால்த்தான் ஒரு பதகளிப்பும் இல்லா மல் சோதினை எழுதலாம் எண்டுவா .

நேரம் மட்டு மட்டா இருக்கப் போனால் சுட்டிலக்கம் எழுதின மேசை எங்கை இருக்குது எண்டு தேடி அலையிறதிலை யும் உப்பிடி தேடி அலையேக்கை எருமை மாடு இவ்வளவு நேரமும் எங்கை கிடந்தது போட்டு வாறாய் எண்டு வாத்திமாரிட்டை பேச்சு வாங்கிறதிலையும் வாற பதகளிப் பிலை நல்லாப் படிக்கிற பிள்ளைக்கும் சோதினை ஒழுங்காச் செய்யேலாமல் போகும் எண்டுவா ஆச்சி .

சோதினைக்கு முதல் நாளே ஆச்சி பழைய மெய்கண்டான் கலண்டர் மட்டையை எடுத்தி செத்தையிலை செருகி வைச்சிடுவா நாங்கள் முந்தி உந்த பழைய மெய்கண்டான் கலண்டர் மட்டையிலை தான் சோதினை எழுதிற தாள் வைச்சு எழுதிறனாங்கள் .

அது மாதிரி பென்சில் எல்லாம் எடுத்து கோப்பிக் கத்தியாலை சீவி எடுத்துத் தீட்டுவா அதோட அழிறப்பரையும் எடுத்து செத்தையில செருகி வைப்பா. அதோட கடையில வாங்கியந்த புல்ஸ்காப் பேப்பர் எல்லாம் எடுத்து வைச்சுப்போடுவா .

விடியவே ராசா எழும்படா இண்டைக்குச் சோதினை எல்லே எண்டு எழுப்புவா. கொஞ்சம் எழும்பப் பிந்தினால் ராசா எண்ட வாயாலேயே கோதாரி விழுவானே இந்தக் கத்துக் கத்துறன் இன்னும் கவட்டுக்கை கையை வைச்சுக்கொண்டு கிடக்கிறாய் எண்டு மூக்குப் பேணியில தண்ணி கொண்ணந்து தெளிச்சு எழுப்புவா .

சோதினையோ நேர்முகத்தேர்வோ நேர காலத்தோட போனால் அங்கை கொஞ்ச நேரம் ஆறுதலா இருக்கலாம் அங்கை இருகிறவையோட கதைக்கலாம். அப்பிடிச் செய்யிறதால மனசில ஒரு அமைதி வரும் அதால சோதினையும் சரி நேர் முகத்தேர்வும் சரி வடிவாச் செய்யலாம் எண்டுவா ஆச்சி .

ஆச்சியிட்டை இருந்த உந்தக் குணத் தைத்தான் இப்பத்தே ஆக்கள் நேரந்தவறாமை எண்டிறாங்கள் . ஆனால் இப்ப பாத்தம் எண்டால் கன கந்தோர் வழிய வேலை செய்யிறவையிட்டை உந்த நேரந் தவறாமை மருந்துக்கும் கிடையாது . சில கந்தோர் வேலைகாறர் நேர காலத்துக்கு அலுவலகத்துக்குப் போகமாட்டாங்கள் அப்பிடித் தற்செயலாப் போனாலும் சனத் தின்ரை வேலையளை நேர காலத்துக்கு செய்யமாட்டாங்கள்.

சிலநிகழ்ச்சியள் நடத்திறவையிட்டையும் நேரந்தவறாமை கிடையாது அழைப்பிதழிலை விழா தொடங்கிற நேரம் எண்டு ஒண்டைப் போடுவாங்கள் ஆனால் கடைசி வரையும் சொன்னநேரத்துக்குத் தொடங்க மாட்டாங்கள். ஏன் கனக்கப் போவான் உப்பிடிக்கொத்த சில விழாக்களுக்கு விருந்தினராய்ப் போறவை சிலரிட்டையும் உந்த நேரந்தவறாமை எண்ட பழக்கம் அஞ்சாத் துக்கும் கிடையாது. உப்பிடி மற்ற ஆக்க ளைக் காக்க வைச் சாத்தான் தங்களை மற்றவை பெரியாக் கள் எண்டு நெப்பினம் எண்டு நெக்கிற ஒரு மனோவியாதி உவை யிட்டை இருக்குது.

உப்பிடிக்கொத்த ஆக்களுக்கு நல்லாப் புளி எண்ணை வைச்சுத் தோய வாக்க வேணும் அப்பத்தான் உந்த விசர் மாறும் எண்டுவா எங்கட ஆச்சி .

தனிய விழாக்கள் எண்டில்லை உப்ப கலியாண வீடு, செத்த வீடு, பூசை வீடு, வீடு குடிபூரல், சாமத்திய வீடு எண்டு ஒரு வைபவங்களையும் நேரத்துக்கு செய்யாம விடுகிற ஒரு வருத்தம் இப்ப வெகு வேகா மப் பரவி வருகுது ஆச்சி உதை ஒரு சமூகப் பெருந்தொற்று எண்டுவா . அநேகமாக கலியாண வீடு சாமத்திய வீடு செய்யிறவங் கள் அழைப்பிதழிலை போடுற நேரத்துக்கு ஒரு நாளும் செய்ய மாட்டாங்கள் .

சில வேளை செத்த வீடு பூசை வீடுக ளைச் செய்யிறவங்கள் செய்ய ஆயத்தமா இருந்தாலும் உதுகளைச் செய்யிற சில புரோகிதர்மார் கோதாரிவிழுவார் நேரத் துக்கு வந்து துலயமாட்டினம் .

அண்டைக்கு எண்டு பாத்து ரெண்டு மூண்டு இடத்திலை ஒத்துக்கொண்டு போட்டு சுடு தண்ணி காலிலை பட்ட நாய் மாதிரி ஒடுப்பட்டுத் திரிவினம் இல்லாட்டில் எல்லா இடமும் போக வேணும் எண்டு போட்டு அரையும் குறையுமாச் செய்வி னம். உப்பிடி அரைகுறையாச் செய்யிற வையைக் கண்டால் புண்ணில புளி பத்தினமாதிரித் தனக்குப் பத்திக்கொண்டு வரும் எண்டு சொல்லிற அப்பு அரையும் குறையுமாச் செய்யிறதிலும் பாக்க செய்யா மல் விடலாம். அதுக்குச் சிலவளிக்கிற காசை வைச்சு ஆரும் இல்லாததுகள் செல்லாததுகளுக்கு உதவலாம் எண்டு வார்.

# முல்லை ஓய்வு நகர்
# Mullai Rest City

## எழுதுமட்டுவாழ் நகரில்
## 2 பரப்பு, 4 பரப்பு காணிகள் விற்பனைக்கு!

*இயற்கையான சூழலில் உ ங்களின் ஓய்வுகாலத்தினை மகிழ்ச்சியாகவும் ஆரோக்கியத்துடனும் வாழுங்கள்!*

**உங்களுக்கு விரும்பியவாறு வீடுகளை அமைத்துக்கொள்ளலாம்.**
**மாசற்ற இயற்கையான சூழல் – பாரம்பரிய முறையிலான வாழ்க்கை – ஆரோக்கிய நிலையங்கள்**
**அத்தியாவசிய தேவைகள் அனைத்தும் அருகில் – பொழுதுபோக்கு அம்சங்கள்**

முதியோர் பராமரிப்பு வசதி – தியான மண்டபம் – மூலிகைத்தோட்டத்துடன் மூலிகைக் குளியல்
அறிவார்ந்த நூல்கள் அடங்கிய நூலகம் – உள்ளூர் வானொலிச் சேவை
ஒன்றுகூடல் நிலையம் – பாரம்பரிய உணவகம் – பல்பொருள் அங்காடி
சுத்தமான குடிநீர் விநியோகம் – யோகா நிலையம்
விருந்தினர் விடுதி – சிறுவர் பூங்கா
ஆயுள்வேத சிகிச்சை நிலையம்
மீன்பிடி குளம் – தாரா பண்ணை
பூங்கா – நடைபயிற்சிப் பாதை – உடற்பயிற்சிக் கூடம்
உள்ளக விளையாட்டுத் தொகுதி – விளையாட்டு மைதானம்







SUPERMARKET

4th Project

இது ஒரு கற்பகவனம் செயற்திட்டம்
Good Gift Property Developers (Pvt) Ltd

**தொடர்புகளுக்கு: 0777 43 5557**


இவ் வாரஇதழ் நல்லூர், No.68, Crossette lane, யாழ்ப்பாணத்திலுள்ள Green Media House (Pvt) Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 03.03.2024இல் வெளியிடப்பெற்றது.